www.tamilarangam.net

தந்துதவியவர்: தேசம்நெற்

1997 முதல்

# தேசம்

சர்வதேச தமிழ் சஞ்சிகை

தேசம் □ இதழ் 31 □ மார்ச் 07 - மே 07 □ ISSN 1474 - 8770 □ www.thesamnet.com

அரசியல் சதுரங்கத்தில் கவிஞர் சேரன்



உற்பத்தி முறையியலின் அரசியல்



விவாதக் களம்: இலங்கையில் தமிழ் பேசும் சமூகங்களும் உறவுகளின் எதிர்காலமும்

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் தோல்வியின் முதற்படி



" நாங்கள் விடுதலைப் புலிகளுடைய ஜால்ராக்கள், ஊது குழல்கள், பினாமிகள் அல்ல. எங்களுக்கென அரசியல் நெறிமுறை இருக்கிறது. "

## ரெலோ பா உ சிறிகந்தாவுடன் நேர்காணல்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# Low Cost Accomodations in London

## Finchley Rd, Archway, Holloway Rd Tube Stations அருகாமையில்

☆ Flats

☆ Studios

☆ Rooms

நூற்றுக்கும் மேற்பட்ட வதிவீடங்கள் வாடகைக்கு உண்டு.

சில நிமிடத்தில் சென்றடையக் கூடியதான போக்குவரத்து வசதிகள் நிறைந்த இடம்.

**மாத வாடகை £400 - £600**

குறிப்பு : மாத வாடகையுடன் ஒரு மாத வாடகை முற்பணமாக செலுத்த வேண்டும். கவுன்சில் ரக்ஸ் மற்றும் கட்டணங்களை குடி இருப்பாளர்களே செலுத்த வேண்டும். மாதாந்த வாடகையை வங்கிக் கட்டளை - Standing Order மூலம் செலுத்த வேண்டும். D.S.S ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

Tel \ Fax : 020 8905 0452

Email : tarrin@desilugroup.com

Web : www.desilugroup.com

Tarrin Constantine, Group Finance Director, Desilu Group of Companies

Collingwood Business Centre, Mercers Rd, London N19 4PU

www.tamilarangam.net

உள்ளே

01 தேசத்தின் பார்வை: You Are Either With Us or against Us

02 நேர்காணல்: சிறிகந்தா - ரெலோ பா உ
த ஜெயபாலன்

10 இலங்கையில் தமிழ் பேசும் சமூகங்களும் உறவுகளின் எதிர்காலமும் (1)
ரவி சுந்தரலிங்கம்

15 அரசியல் சதுரங்கத்தில் கவிஞர் சேரன்
நட்சத்திரன் செவ்விந்தியன்

20 உற்பத்தி முறையியலின் அரசியல்
ச வேலு

23 நினைவில் அணையாத தீ
என் செல்வராஜா

24 கதைசொல்கிறார் அமைச்சர் டக்ளஸ்
ரீ கொன்ஸ்ரன்ரைன்

26 தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் தோல்வியின் முடிவு
சி அசோகன்

28 எண்கள் பேசும் தமிழ் - முஸ்லீம் இன உறவுகள்
த ஜெயபாலன்

31 சேது சமுத்திரத் திட்டமும் இலங்கை மீதான இந்தியாவின் நவகாலனியமும்
ச முருகையா

Chief Editor
T Jeyabalan
0044 208 279 0354
thesam97@hotmail.com
Administrative Editor
T Constantine
0044 208 905 0452
Editorial Board
Technical Support : S Raja
Type Setting : J Srirajani

THESAM
P O Box 35806,
London, UK,
E11 3JX.

# You Are Either With Us or Against Us

"ஒவ்வொருவரும் கருத்துக்களைக் கொண்டிருக்கவும் அக்கருத்துக்களை அச்சமின்றி வெளியிடவும் உரிமை உடையவர்கள்; இ∴தானது எல்லைகளைக் கடந்தும் எந்த ஊடகத்துக்கு ஊடாகவும் தகவல்களையும் எண்ணங்களையும் தேடவும், பெறவும், பரிமாறவுமான உரிமையை உள்ளடக்குகிறது" என்கிறது சர்வதேச மனித உரிமைப் பிரகடனத்தின் 19வது பிரிவு. ஆனால் தமிழ் ஜனநாயகவாதிகள், உரிமைவாதிகள், ஊடகவியலாளர்கள் என்று அழைக்கப்படுவோர் மத்தியில் எப்போதும் கருத்துச் சுதந்திரம் என்பது பெரும்பாலும் தங்களுடைய கருத்துக்களை மட்டும் வெளியிடுவதற்கான சுதந்திரம் என்றே அர்த்தப்படுத்தப்படுகிறது.

தகவல் தொழில்நுட்பத்தின் அபரித வளர்ச்சியானது கருத்துச் சுதந்திரத்திற்கு விளைநிலமாகவும் ஒடுக்குமுறைக்கு எதிரான தளமாகவும் அமைந்துள்ளது. ஆனால் துரதிஸ்டவசமாக புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் இது எதிர்மறையான விளைவையே பெரும்பாலும் ஏற்படுத்தி உள்ளது. ஏற்படுத்தி வருகிறது.

தாங்களும் தாங்கள் சார்ந்த அமைப்புகளும் அவற்றினது கருத்துக்களும் விமர்சனத்திற்கு அப்பாற்பட்டவையாகவும் இறுதியானவையாகவும் சிலர் கற்பிதம் செய்து கொள்கின்றனர். இக்கருத்தியல் வறுமையானது மற்றையவர்களின் கருத்துக்கள் மீதும் மற்றைய அமைப்புகளின் மீதும் அவதூறுகளையும் தனிநபர் தாக்குதல்களையும் கட்டவிழ்த்து விட ஏதுவாகிறது. இதன் மோசமான பக்கத்தினையே புலம்பெயர்ந்த தமிழர்களால் நடத்தப்படும் இணையத்தளங்களில் இன்று காண்கிறோம். ஒரு காலகட்டத்தில் மொட்டைக் கடிதத்தில் அரம்பித்த இந்த மூன்றாம்தர அரசியல் இன்று இணையத்தளத்திற்கு பரிமாணம் பெற்றுள்ளது.

இவ்வாறான நடவடிக்கைகள் வி.புலிகளால் மட்டுமே நடத்தப்படுவதாக வி.புலிகளுக்கு எதிரான; தங்களை மாற்றுக் குழுக்கள் என அழைப்பவர்கள் சொல்வது முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது. தங்களை ஜனநாயகவாதிகள், உரிமைவாதிகள் எனக் கூறிக்கொள்ளும் இவர்களின் ஜனநாயக மறுப்பும், தனிநபர்கள் மீதான தாக்குதல்களும் எதிர் விளைவுகளையே ஏற்படுத்தும்.

செப்ரம்பர் 11, 2001ல் அமெரிக்கா மீதான தாக்குதலுக்குப் பின் அதிபர் ஜோர்ஜ் புஸ் தெரிவித்த மிகப் பிரசித்தி பெற்ற கூற்று; நடுநிலை என்பதற்கு இடமில்லை "You are either with us or against us ...." இன்று இலங்கை இன முரண்பாடு தொடர்பாக கருத்துக்களை கொண்டிருப்பவர்கள் மேல் இதே வாசகம் தொங்கவிடப்பட்டு உள்ளது. இவ்வாசகத்தை வி.புலிகள் அவர்களது ஆதரவாளர்கள் மட்டுமல்ல தங்களை ஜனநாயகவாதிகள் உரிமைவாதிகள் என்றழைப்போரும் தொங்கவிட்டு உள்ளனர்.

குறுகிய அரசியல் நோக்கங்களுடன் இலங்கையில் உள்ள அரசியல் கட்சிகளினதும் ஆயுதக் குழுக்களினதும் பின் தொங்கிக் கொள்வதை தவிர்த்து, குறுகிய சிந்தனைப் போக்கில் இருந்து விடுபட்டு ஆரோக்கியமான விவாதங்களுக்கும் கருத்துப் பரிமாறல்களுக்கும் புலம்பெயர்ந்த சமூகம் களமாக அமைய வேண்டும். எமக்கு கிடைக்கப்பெற்றுள்ள மட்டுப்படுத்தப்பட்ட அரசியல் அந்தஸ்தைப் பயன்படுத்தி அம்மக்களின் எதிர்கால வாழ்நிலையை குறைந்தபட்சமாவது உயர்த்த முன்வர வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்



**நாங்கள் வி. புலிகளுடைய ஜால்ராக்கள், ஊது குழல்கள், பினாமிகள் அல்ல. எங்களுக்கென அரசியல் நெறிமுறை இருக்கிறது. நாங்கள் எவருக்கு முன்னாலும் மண்டியிட்டு பழக்கப்பட்டவர்கள் அல்ல. நெற்றிக் கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே என்று சொல்லும் துணிவு எங்களுக்கு இருக்கிறது. வி. புலிகள் இயக்கம் ஒரு தவறான பிழையான நடவடிக்கையை எடுத்தால் நாங்கள் அதைச் சுட்டிக்காட்டத் தயங்க மாட்டோம். இதை நீங்கள் நம்புங்கள்.**

**சிறிகந்தா: ரெலோ பா உ**

# நேர்காணல்: சிறிகந்தா_ரெலோ பா உ

*தேசம்: லண்டனில் ரெலோவின் கிளையை உருவாக்க உத்தேசித்தும் உள்ளீர்கள். இந்த நீண்ட இடைவெளியின் பின் அதற்கான என்ன அவசியம் இப்போது ஏற்பட்டுள்ளது ?*

சிறிகாந்தா: ஏற்கனவே லண்டனில் நூற்றக்கணக்கான ரெலோ உறுப்பினர்கள் வாழ்ந்து வருகின்ற சூழ்நிலையில் அவர்களும் கட்சியின் அரசியல் நிலைப்பாடு தொடர்பாக ஆர்வத்தோடும் ஊக்கத்தோடும் இருப்பதால் அவர்களை ஸ்தாபனப்படுத்தி கட்சியின் கிளை ஒன்றை லண்டனில் உருவாக்குவதற்கான தேவையை உணர்ந்திருந்தோம்.

*தேசம்: இவ்வளவுகால இடைவெளிக்குப் பின் ஏன் இப்போது அவ்வாறான முயற்சி எடுக்கப்பட்டு உள்ளது ?*

சிறிகாந்தா: இப்போது தான் காலம் சரியாக அமைந்து வந்துள்ளது.

*தேசம்: ஈரோஸ் அமைப்பின் முன்னாள் தலைவர் பாலகுமார் வி.புலிகளையும் அவர்களது தலைமையையும் ஏற்றுக் கொண்டு முற்றாக வி.புலிகளில் இணைந்து கொண்டார். இன்று ரெலோவிற்கும் வி.புலிகளுக்கும் கருத்தியல் ரீதியான எந்த வேறுபாடும் கிடையாது. நீங்கள் ஏன் ரெலோ என்ற அமைப்பை கலைத்து விட்டு முற்றாக வி.புலிகளுடன் சங்கமிக்கக் கூடாது ?*

சிறிகாந்தா: நண்பர் பாலகுமாரனுடைய அரசியல் நிலைப்பாட்டுடன் அவர் முன்னர் சார்ந்திருந்த ஈரோஸி அரசியல் நிலைப்பாட்டுடன் நீங்கள் தயவு செய்து ரெலோவை ஒப்பிடக் கூடாது. நாங்கள் அன்று முதல் இன்று வரை ஒரு தனியான அரசியல் அமைப்பு. தமிழ் தேசியக் கூட்டமைப்பில் நாங்கள் அங்கம் வகிக்கிறோம். தமிழ் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினை தொடர்பிலே திட்டவட்டமான ஒரு முடிவை எடுத்திருக்கின்றது. தமிழீழ வி.புலிகள் மாத்திரமே இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு

காரைநகரை சொந்த ஊராகக் கொண்ட சட்டத்தரணியாக பணியாற்றிய சிறிகந்தா 1980க்களின் முற்பகுதியி தமிழீழ விடுதலை இயக்கம் ரெலோவின் ஆதரவாளராகச் செயற்பட்டார். யாழில் ரெலோவின் கோட்டையாகவு தமிழீழ விடுதலைப் புலிகளால் ரெலோ அழிக்கப்பட்ட போது பலர் உயிர்தப்பி வெளியேறுவதற்கா பாதுகாப்பரணாக காரைநகர் இருந்தது குறிப்பிடத்தக்கது. 1986ல் தமிழீழ விடுதலை இயக்கம், தமிழீ விடுதலைப் புலிகளால் அழிக்கபட்ட பின் தன்னை அவ்வியக்கத்துடன் முழுமையாக இணைத்துக் கொண் இன்று பா உ உள்ளார். தமிழரசுக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி என ரெலோவில் உள்ள அரசிய சாதுர்யம் உடைய முக்கியஸ்தர் சிறிகந்தா. இவர் இவ்வாண்டு முற்பகுதியில் லண்டன் வந்திருந்த போ ஹரோவில் உள்ள அவருடைய நண்பரின் இல்லத்தில் ஜனவரி 7ல் சந்தித்தோம். நாம் கேட்டது தயக்கமின்றி சந்திப்புக்காக நேரத்தை ஒதுக்கிய அவர் எமது கேள்விகளுக்கும் தயக்கமின்றி தெளிவாகே பதிலளித்தார்.

www.tamilarangam.net

விடயத்தில் தமிழ் மக்களை பிரதிநிதித்துவப் படுத்த வேண்டும் என்பது தான் அது.

தமிழீழ வி.புலிகள் ஆயுதம் தாங்கி தமிழீழ விடுதலைக்காக போரிட்டுக்கொண்டிருக்கிற இயக்கம். எமது மக்களுடைய எதிர்கால நலன்கருதி நான் முன்னர் குறிப்பிட்ட நிலைப்பாட்டுக்கு வந்திருக்கிறோம். தமிழீழ வி.புலிகள் தங்கள் விழுயிலே செயற்படுவார்கள் நாங்கள் எங்கள் விழுயிலே செயற்படுகிறோம். பொதுவான விடயம் என்னவெனில் தேசியப்பிரச்சினையைத் தீர்ப்பது தொடர்பில் த.வி.புலிகளுக்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஊடாக எமது முழுமையான ஆதரவை வழங்கி வருகிறோம். பேச்சுவார்த்தைகள் பலனளிக்கிவில்லை என்றால் சுதந்திர தமிழீழம் தான் தவிர்க்கப்பட முடியாத முடிவாக இருக்கும் என்ற நிலைப்பாட்டையும் நாங்கள் கொண்டிருக்கிறோம்.

ஆனால் ஈரோஸ் இயக்கம் த.வி.புலிகள் இயக்கத்துடன் இணைந்து தனித்துவத்தை இழந்து அதனுடைய பகுதியும் பாகமும் ஆகிவிட்டது.

*தேசம்: இரு அமைப்புகள் கருத்தியல் ரீதியாக ஒரே கொள்கையை வைத்திருக்கும் போது அங்கு தனித்துவம் என்பது என்ன ? அதாவது ரெலோவின் தனித்துவம் என்ன ?*

சிறிகாந்தா: நீங்கள் எங்களை சற்று புரிந்து கொள்ள வேண்டும். நாங்கள் அங்கிகரிக்கப்பட்ட அரசியல் கட்சி. ஜனநாயக அரசியல் நீரோட்டத்தில் நின்றுகொண்டிருக்கிறோம். த.வி. புலிகள் அப்படி அல்ல. அது ஒரு இராணுவக் கட்டமைப்புடன் கூடிய தமிழினத்துக்கான விடுதலை இயக்கம். இவ்விரண்டக்கும் இடையிலேயே அடிப்படையிலேயே பாரிய வேறுபாடு இருக்கிறது.

நாங்கள் முன்பு இல.இந் ஒப்பந்தத்திற்கு முன் இருந்தது போல ஆயுதம் தாங்கி தமிழீழ விடுதலைக்காகப் போரிடும் இயக்கமாக இருந்திருந்தால் உங்களது கேள்விக்கான எனது விடை ஒரே வரியில் இருந்திருக்கும்.

*தேசம்: ரெலோவின் முன்னாள் போராளிகள் பலரையும் சந்தித்து பேசியுள்ளீர்கள். வி.புலிகளுடன் இணைந்து செயற்படுவதன் அவசியத்தை அவர்களிடம் தெரிவித்து உள்ளீர்கள். ரெலோவிற்கு வி.புலிகளால் ஏற்படுத்தப்பட்ட ரணங்கள் ஆறியுள்ளதா ?*

சிறிகாந்தா: நிச்சயமாக. விரல் விட்டு எண்ணக் கூடிய ஒருசிலரைத் தவிர மிக மிகப் பெரும்பான்மையானவர்கள் எமது நிலைப்பாட்டில் உள்ள நியாயத்தையும் அதனுடைய தர்க்க ரீதியான அடிப்படையையும் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

அதேசமயம் த.வி.புலிகள் இயக்கம் ரெலோ இயக்கத்தை தாக்கி அதனுடன் மோதிய 1986 ஏப்ரல், மே காலப்பகுதியைத் தொடர்ந்து இலங்கையில் இருந்து வெளியெறி வெளிநாட்டுக்கு வந்தவர்களாக இப்பொழுதும் இந்த நாட்டிலே இருந்து கொண்டிருக்கிற ஒரு சிலரைப் பொறுத்த மட்டிலே அவர்கள் அதே மனோநிலையில் தான் இருந்துகொண்டிருக்கிறார்கள். அது ஒரு துக்ககரமான விடயம்.

நான் நினைக்கிறேன் நாங்கள் அவர்களை மாற்ற முடியாது. எப்படி அவர்களால் எங்கள் நிலைப்பாட்டில் மாற்றம் கொண்டு வர முடியாதோ அதுபோல அவர்களையும் அவர்களுடன் உரையாடிய அளவிலே மாற்ற முடியாது என்பது எனக்கு நன்றாகத் தெரிகிறது. அவர்களைப் பற்றி மேற்கொண்டும் விவாதிப்பதிலே அர்த்தமில்லை என்றே நினைக்கிறேன். அவர்களை அவர்களுடைய விழியிலே விட்டுவிடுவோம். காலம் அவர்களை சரியான பாதையிலே கொண்டு வந்து சேர்க்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது.

*தேசம்: ஒரு காலத்தில் தமிழீழத்தை நிராகரித்த தமிழ் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலத்தை இன்று மாமனிதராக கொண்டாடி அவருக்கு (ஜனவரி 06, இல்போர்டில்) அஞ்சலியும் செலுத்துகிறீர்கள். ஆனால் உங்களுடன் தோளுக்குத் தோள் கொடுத்த சக போராளிகளையும் அவர்களது குடும்பத்தினரையம் நீங்கள் கௌரவிக்கத் தவறியதாக உங்கள் மீது குற்றம்சாட்டப்பட்ட உள்ளதே ?*

சிறிகாந்தா: அஞ்சலி செலுத்தவில்லை என்று அவர்கள் எப்படிச் சொல்ல முடியும். எங்களுடைய ஒவ்வொரு கூட்டமும் மறைந்த எமது முன்னோடிகள், தலைவர்கள், போராளிகள் பொது மக்களுக்கு அஞ்சலி செலுத்தியே ஆரம்பிக்கப்படுகிறது.

அவர்களுடைய நினைவுகள் எங்கள் இதயங்களோடு கலந்திருக்கின்றது. நாடி நரம்புகளோடு இணைந்திருக்கின்றன. அப்படி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இருக்கையில் இவர்கள் எப்படி நாங்கள் அஞ்சலி செலுத்தவில்லை என்று சொல்ல முடியும். இது ஒரு அபத்தமான கேள்வி. நேர்மையீனமான கேள்வி. குதர்க்கமான கேள்வி.

*தேசம்: தமிழீழ விடுதலைப் போரட்டத்தில் ஈடுபட்டுள்ள ஈடுபட்ட பெரும்பாலும் எல்லா அமைப்புகளுமே சகோதர இரத்தத்தில் தோய்ந்தவையே. அதனை தவறு என்று கூட இதுவரை யாரும் குறிப்பிடத் தயாராகவில்லை. இந்நிலையில் ஒற்றுமை, ஜனநாயகம் என்பவற்றின் அர்த்தம் என்ன என்று நீங்கள் நினைக்கிறீர்கள் ?*

சிறிகாந்தா: அடக்கப்பட்ட ஒரு தேசத்தின் விடுதலைக்காக சம காலத்தில் பல்வேற அமைப்புகள் ஆயுதம் தாங்கி செயற்படுகின்ற பொழுது அவர்களுக்கிடையே மோதல்கள் எற்படுவது தவிர்க்கப்பட முடியாதது. அகில அரங்கில் அழுத்தமான உதாரணங்களைக் கூட நான் சுட்டிக்காட்ட முடியும். தமிழ் தேசத்தை பொறுத்தமட்டில் இப்படியான மோதல்கள் ஏற்பட்டது வேதனைக்குரியது.

ஆனால் தங்கள் தவறுகளை ஏற்றுக்கொள்கிறார்கள் ஒப்புக்கொள்கிறார்கள் என்பது பிரச்சினைக்குரியதல்ல. எங்களைப் பொறத்தமட்டில் எங்களுக்கு இழைக்கப்பட்ட தவறுகளை மாத்திரமல்ல எங்கள் தரப்பில் இழைக்கப்பட்ட தவறுகளையும் நாங்கள் உணர்ந்து கொண்டிருக்கிறோம். இந்த விடயத்திலே எந்த ஒரு இயக்கமாவது பகிரங்கமாக அதை ஒப்பக்கொள்ள வேண்டும், மன்னிப்புக் கோர வேண்டும் என்று எதிர்பார்ப்பது அநாவசியமானது.

ஏனெனில் எங்கள் மக்களது தேசியப் பிரச்சினை இன்னமும் தீர்க்கப்படவில்லை. இங்கு தொடர்ந்தும் மாபெரும் தவறகள் மீண்டும் மீண்டும் அரங்கேறிக் கொண்டிருக்கிறது. ஏதோ ஒரு காலத்தில் அல்லது சமீபகாலத்தில் த.வி. புலிகள் அதைச் செய்தார்கள் இதைச்செய்தார்கள் என்பதை காரணமாகக் காட்டிக் கொண்டு இன்றைக்கு சிறிலங்கா அரசின் எடுபிடிகளாக, கைக்கூலிகளாக சில முன்னாள் தமிழீழ தீவிரவாத இயக்கங்கள் தங்களை கேவலமான நிலைமைக்கு மாற்றிக்கொண்டிருக்கின்றன. அதை நாங்கள் மறந்துவிடக்கூடாது.

அந்த சூழ்நிலை நீடித்துக் கொண்டிருக்கிற வகையிலே வேறு இயக்கங்கள் த.வி.புலிகள்



உட்பட தாங்கள் இழைத்த தவறகளை ஏற்றுக் கொள்வார்கள் என்று எப்படி எதிர்பார்க்க முடியு தவறு இழைக்கின்ற நிலைமை தொடர்ந்து பாரி அளவிலே நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இந்நிலைமை முதலிலே நிறுத்தப்பட வேண்டு தவறுகள் இழைப்பது சகல தரப்பிலும் நிறுத்தப்படும் என்றால் தான் தவறுகளை ஒப்பு கொள்வது பற்றி நாங்கள் யோசிக்க முடியும்.

*தேசம்: இலங்கை அரசாங்கத்தின் கைக் கூலிகளாக செயற்படுவதாககுறிப்பிட்டிருந்தீர்க தமிழ் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்படுவத சற்றமுன் வரை ரெலோவும் இலங்கை அரசின் கைக்கூலியாக பினாமியாக செயற்பட்டது தாளே*

சிறிகாந்தா: இங்கு தான் நீங்கள் தவறிழைக்கிறீர்கள். 1990 யூன் 11ல் இந்திய அமைதிப்படை வெளியேறிய சூழலிலே த.வி. புலிகளுக்கம் சிறிலங்கா அரசுக்கும் மோதல் ஏற்பட்டிருந்த சூழலிலே சில இயக்கங்களைப் போல நாங்களும் புலிகளுக்கு எதிராக ஆயுதம் தாங்கி செயற்பட்டோம் என்பது உண்மைதான்

அனால் எங்களக்கும் மற்றவர்களக்கும் இருந்த வேறபாடு நாங்கள் அரசபடைகளினால் செய்யப்பட்ட குற்றச்செயல்களை வெளிக்கொணர்ந்தோம். அதனால் தயவு செய்து எங்களுடைய நிலைப்பாட்டையும் மற்றவர்களையும் நீங்கள் ஒப்பிடக் கூடாது. ரெலோ இயக்கம் அரசியல் ரீதியாக தன்னைக் கறைப்படுத்திக் கொண்டதில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



*தேசம்: சர்வகட்சிக்குழுவால் நியமிக்கப்பட்ட நிபுணத்துவக்குழுவினரின் பெரும்பான்மைக் குழுவின் தீர்வுத் திட்டம் பற்றி உங்களுடைய அபிப்பிராயம் என்ன ?*

சிறிகாந்தா: மாபெரும் மக்கள் ஆதரவுடன் 22 பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட எங்களுக்கு அழைப்பில்லை. ஆனால் வடக்கு கிழக்கில் தட்டுத் தவறி ஒரு ஆசனத்தைப் பெற்ற கட்சியும் அழைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இது சர்வகட்சி மாநாடல்ல. தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை மறுதலித்து நிற்கிற ஏனைய கட்சிகளின் மாநாடு.

இந்தக் குழுவின் அறிக்கைகளைப் பற்றி நாம் அதிகம் அலட்டிக் கொள்ளத் தேவையில்லை. அவர்களும் ஏகமனதான அறிக்கையைத் தரவில்லை. சிலர் பெரும்பான்மை அறிக்கையைத் தூக்கிப்பிடிக்கிறார்கள். ஆனால் அரசாங்கம் சொல்லிவிட்டது அந்த அறிக்கைக்கும் தங்களுக்கும் சம்பந்தமில்லை என்று.

உண்மையிலே பிரச்சினையைத் தீர்க்க ராஜபக்ச விரும்பினால் ஆதரவு வழங்க முன்வந்திருக்கின்ற ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து ஒரு தீர்வுத் திட்டத்தை தயாரிக்க வேண்டும். இவை இரண்டும் இணைந்த ஒரு தீர்வுத் திட்டத்தை தயாரித்து முன் வைத்தால் அது மிக மிகப் பெரும்பான்மையான சிங்கள மக்களுடைய ஆதரவைக் கொண்டிருக்கும் அரசியல் கட்சிகளின் கூட்டு நிலைப்பாடாக இருக்கும். ஆனால் அவர் அதைச் செய்வதற்குப் பின்னடிக்கிறார்.

தீர்வுத் திட்டத்தை இழுத்தடித்துக் கொண்டு கிழக்கை கம்பளீகரம் செய்வது தான் அவர்களுடைய நோக்கம். கிழக்கில் இருந்து த.வி. புலிகளை விரட்டி அடிக்க முடியும் என்று அவர்கள் நம்புகிறார்கள். வடக்கையும் கிழக்கையும் பிரித்து அந்த அடிப்படையிலே தீர்வொன்றை இறுதியாக சமர்ப்பிப்பது தான் அவர்களுடைய நோக்கம்.

சிறிலங்கா அரசுக்கு ஒரு நிகழ்ச்சி நிரல் இருக்கிறது. இதை நாங்கள் புரிந்து கொள்ள வேண்டும். அதை விடுத்து ஏதோ மகிந்த ராஜபக்ச நல்லவர் நேர்மையானவர் அவர் அரசியல் தீர்விலே நம்பிக்கை கொண்டிருக்கிறார் என்ற நோக்கத்தில் அந்த நடவடிக்கைகளைப் பார்த்தால் நாங்கள் ஏமாற்றம் அடைவோம். சிங்கள மக்களும் இந்த யுத்தத்தால் பாதிக்கப்படுகிறார்கள் ஆனால் அதைப்பற்றியெல்லாம் இந்த ஆளும் சிங்கள

பின்னர் 1994 சந்திரிகா கலத்தில் இருந்து பிரெமதாசாவின் இறுதிக் காலத்திலேயே மெல்ல மெல்ல ஆனால் உறுதியாக எமது அரசியலிலே மாற்றம் ஏற்பட்டது. சந்திரிகா காலத்திலே அது தீவிரம் அடைந்தது. முதல் தேர்தலிலேயே நாங்கள் அவரை எதிர்த்தோம். சந்திரிகா அரசு எங்கள் ஆயுதங்களைப் பறித்தது. நாங்கள் நிராயுத பாணிகளாக்கப்பட்டோம். இன்னொரு இயக்கத்தால் நாங்கள் குறிவைத்து தாக்கப்பட்டோம். நாங்கள் இரத்த விலை கொடுத்து வந்திருக்கிறோம்.

1994இல் த.வி.புலிகளுக்கு அரசியல் ரீதியாக நேசக்கரம் நீட்ட ஆரம்பித்தோம். தமிழ் தேசிய முன்னணியை அமைத்து அதனூடாகவும் அரசியல் வேலைகளில் ஈடுபட்டோம். அதன் இறுதிக்கட்டம் தான் 2001ல் தமிழ் தேசியக் கூட்டமைப்பாக பரிணமித்தது.

*தேசம்: பேச்சவார்த்தைகள் தோல்வியடைந்தால் தமிழீழத்தை கோரவும் முடிவெடுத்துள்ளதாக குறிப்பிட்டிருந்தீர்கள். தமிழீழத்திற்கான சாத்தியப்பாடுகள் இன்றும் உள்ளது என்று நீங்கள் இன்னமும் நம்புகிறீர்களா ?*

சிறிகாந்தா: நிச்சயமாக. சிறிலங்கா அரச வக்கிரமாக அரசியல் தீர்வொன்றை மறுத்து தொடர்ந்து இராணுவரீதியாக தமிழ் தேசத்தின் பிரச்சினையை அணுகிக் கொண்டிருக்கிற வகையிலே தமிழீழத்திற்கான வாய்ப்புகள் எப்பொழுதும் போல பிரகாசமாகவே இருக்கும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அதிகார வர்க்கம் பெரிதாக அலட்டிக்கொள்வதாக கவலைப்படுவதாக தெரியவில்லை. முதலில் அவர்கள் தங்கள் மக்களைப் பற்றியே கவலைப்படுவதாகத் தெரியவில்லை.

*தேசம்: அழைப்பு விடுக்கப்பட்டிருந்தால் தமிழ் தேசியக் கூட்டமைப்பு சர்வகட்சி குழுவுடன் இணைந்து தீர்வு ஒன்றை தயாரிப்பதில் நிச்சயம் ஈடுபட்டிருப்பீர்களா ?*

சிறிகாந்தா: அழைப்புவிடுக்கப்பட்டிருந்தால் அது பரிசீலிக்கப்பட்டிருக்கும். எந்த முடிவு எடுத்திருப்போம் என்று என்னால் சொல்ல முடியாது. அழைப்பே விடுக்கப்படவில்லை. பிறகு அதைப்பற்றி நான் என்ன சொல்ல முடியும்.

*தேசம்: இலங்கை அரசையோ அதன் செயற்பாடுகளையோ ஏற்றுக்கொள்ளாதவராக நீங்கள் இருக்கிறீர்கள். இலங்கை அரசு பற்றிய நம்பிக்கையீனம் ஒன்று உங்களிடம் உள்ளது. அப்படியொரு நிலையில் பாராளுமன்ற உறுப்பினராக பாராளுமன்றம் செல்வதால் எதனைச் சாதிக்க முடியும் என நினைக்கிறீர்கள் ?*

சிறிகாந்தா: பாராளுமன்றம் ஊடாக தீர்வு வரவேண்டும் என்றால் தீர்வு எப்போதோ வந்திருக்கும். தந்தை செல்வா காலத்திலோ அண்ணன் அமிர்தலிங்கம் காலத்திலோ அது வந்திருக்க வேண்டும். பாராளுமன்றத்தின் மீது உங்களுக்கும் சரி எனக்கும் சரி நம்பிக்கை இருக்க முடியாது. தமிழ் மக்களுக்கும் நம்பிக்கையில்லை.

ஆனால் அது ஒரு அரசியல் களம். அங்கு தமிழினத்துக்குரிய ஆசனங்களை தமிழ் தேசாபிமான சக்திகள் நிரப்பவில்லை என்றால் அந்தக் கதிரைகளுக்குப் பாரமாக இனத்துரோகிகள் சிங்கள அரசினுடைய கூலிக்கும்பல்கள் தான் உட்கார்ந்திருப்பார்கள். அவர்கள் அங்கு செல்வதைத் தடுத்திருக்கிறோம்.

அடுத்து பாராளுமன்றத்தில் என்ன நடக்கிறது என்பதை வெளிநாடுகளும் உன்னிப்பாக கவனித்துக் கொண்டிருக்கின்றன. எம் பி என்கிற அங்கிகாரம் பாராளுமன்றத்துக்கு வெளியேயும் எங்களின் குரல்களுக்கு வலுவளிக்கிறது. மக்கள் பிரதிநிதி என்பது சாதாரனமானதல்ல. அது ஒரு நம்பிக்கைச் சொத்து. அதை நாங்கள் நேர்மையோடும் துணிச்சலோடும் சரிவர பயன்படுத்த கடமைப்பட்டிருக்கிறோம்.

*தேசம்: அண்மைக்காலத்தில் இலங்கையில் சமாதானம் சாத்தியமாகும் என நீங்கள் நினைக்கிறீர்களா ?*

சிறிகாந்தா: அரசியலில் எதுவும் நடக்கலாம். வரலாற்றை மாற்றுகிற விடயங்கள் வரலாற்றில் திருப்புமுனையாகும் விடயங்கள் எதுவுமே முன்னறிவிப்புச் செய்து கொண்டு வருவதில்லை. ஆகவே எதுவும் நடக்கலாம் எப்படியும் நடக்கலாம். ஆகவே அந்த அடிப்படையில் தான் நாங்கள் பிரச்சினைகளைப் பார்க்க வேண்டும். அரசியல் அரங்கிலே கடந்த 50 வருடங்களுக்கு மேலாக நான் அதைப் பார்த்திருக்கிறேன்.

*தேசம்: தமிழ் தேசியக் கூட்டமைப்பு வி.புலிகளின் ஒரு பினாமி அமைப்பாக செயற்படுகின்றது என்ற குற்றச்சாட்டு உள்ளது. வி.புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச் செல்வனின் கட்டுப்பாட்டிலேயே இது உள்ளதாகவும் கூறப்படுகிறது. இது பற்றி உங்கள் கருத்து என்ன ?*

> நாங்கள் அரசியலை தமிழீழ விடுதலைப் புலிகளிடமிருந்தோ, அல்லது தம்பி தமிழ்ச்செல்வனிடமிருந்தோ அரசியலைக் கற்றுக்கொள்ளும் தேவை கொண்டவர்களல்ல.

சிறிகாந்தா: நாங்கள் த.வி. புலிகளுடைய ஜால்ராக்கள், ஊதுகுழல்கள், நீங்கள் குறிப்பிட்டது போல பினாமிகள் என்பதெற்கெல்லாம் இடம்கிடையாது. நாங்கள் எவருமே இன்றைக்கு நேற்றைக்கு அரசியலுக்கு வரவில்லை. ஆகவே நாங்கள் அரசியலை தமிழீழ விடுதலைப் புலிகளிடமிருந்தோ, அல்லது தம்பி தமிழ்ச்செல்வனிடமிருந்தோ அரசியலைக் கற்றுக்கொள்ளும் தேவை கொண்டவர்கள் அல்ல.

நாங்கள் தமிழினத்திற்கு சம உரிமைகோரி நிற்கிறோம். அதற்கு நாங்கள் சுயமரியாதை கொண்ட மனிதர்களாக இருக்க வேண்டும். எங்களுக்கென அரசியல் நெறிமுறை இருக்கிறது. ஆகவே நாங்கள் எவருக்கு முன்னாலும் மண்டியிட்டு பழக்கப்பட்டவர்கள் அல்ல. நெற்றிக் கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே என்று சொல்லும் துணிவு எங்களுக்கு இருக்கிறது.

நீங்கள் குறிப்பிட்டது போல சிலரிடம் அக்கருத்து உள்ளது. அவர்களுடைய கருத்துச் சுதந்திரத்தை நான் மதிக்கிறேன். த.வி.புலிகள் இயக்கம் ஒரு தவறான நடவடிக்கையை எடுத்தால் நாங்கள் அதைச் சுட்டிக்காட்டத் தயங்க மாட்டோம். இதை நீங்கள் நம்புங்கள். தமிழ் மக்களுடைய நலன்கள் தான் எங்களுக்கு முக்கியமானது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

*தேசம்: அரசியல் படுகொலைகள் மிக மோசமான நிலைக்குச் சென்றுள்ளது. இலங்கை அரசின் புலனாய்வுப் படைகள், ஆயுதக்குழுக்கள், வி.புலிகள் என ஆயுதம் வைத்திருப்பவர்கள் எல்லோருமே இந்த அரசியல் படுகொலைகளில் ஈடுபட்டு உள்ளனர். ரெலோ ஒரு அரசியல் கட்சி என்ற வகையில் அவற்றை ஒட்டுமொத்தமாக கண்டிக்காமல் படுகொலைகளைத் தெரிவு செய்தே கண்டிப்பதாகக் கூறப்படுகிறதே ?*

சிறிகாந்தா: தம்பி சிறிசபாரத்தினமும் ரெலோ போராளிகளும் கொல்லப்பட்ட பொழுது நான் சென்னையில் இருந்தேன். ரமிழ் ரைம்ஸ் (லண்டன் ரமிழ் ரைம்ஸ் அல்ல) என்கிற செய்தித்தாளின் ஆசிரியராக நான் அப்போது செயற்பட்டேன். A due Assasination Politics 'படுகொலை அரசியலுக்கு விடைகொடுப்போம்' என்ற தலைப்பிலே நீண்ட கட்டுரை எழுதியிருந்தேன். அரசியல் படுகொலைகளை எந்த ஜனநாயகவாதியும் ஏற்றுக்கொள்ள முடியாது என்பதை திட்டவட்டமாக தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இலங்கை அரச படைகளும் அவர்கள் உடன் இணைந்த துரோகக் கும்பல்களுமே பெரும்பாலான படுகொலைகளில் ஈடுபட்டுள்ளன. த.வி.புலிகளும் தம் நடவடிக்கைகள் மூலமாக சில அரசியல் விரோதிகளை அழித்திருக்கிறது என்பதை நான் மறுக்க முடியாது.

> போரிடுவதற்கு இன்றைக்கு இளைய தலைமுறை தயாராக இருக்கிறது. ஆனால் அரசியல் துறையிலே இராஜதந்திர முறையிலே மனித உரிமை மீறல்கள் தொடர்பிலே குரல் எழுப்புவதற்கு புத்திஜீவிகள் தமிழீழ தேசத்தை நேசிப்பவர்கள் முன்வர வேண்டும்.

படுகொலை என்ற ரீதியிலே இவை யாவுமே கண்டிக்கப்பட வேண்டும். நீங்கள் ஒன்றை பார்க்க வேண்டும் யுத்தத்தை எதிர்நோக்குகின்ற ஒரு இயக்கத்தின் யுத்த நடவடிக்கைகளுக்கும் அரசியல் சாசனத்திற்கமைய செயற்படுகிற அரசாங்கத்தின் நடவடிக்கைக்கும் இடையிலே பாரிய வேறுபாடுகள் உண்டு. ஒரு அரசு ஒரு பொழுதுமே ஆயுதம் தாங்கிய ஒரு இராணுவ அமைப்புப் போல செயற்படக்கூடாது. அரசு சட்டபூர்வமானது. ஒருவர் சட்டவிரோதமாகச் செயற்பட்டாலும் அவர் சட்டப்படியே விசாரிக்கப்பட வேண்டும். அரசாங்கத்தினுடைய நடவடிக்கைகள் அரசாங்கத்துடன் இணைந்து செயற்படகின்ற கும்பலுடைய நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்பட்டு இப்படியான படுகொலைகள் நிறுத்தப்படுமாய் இருந்தால் நிச்சயமாக த.வி. புலிகளும் கூட தங்கள் தரப்பிலே இருந்து மேற்கொள்கிற இப்படியான நடவடிக்கைகளை நிறுத்த வேண்டிய சூழ்நிலை ஏற்படும்.

*தேசம்: இந்த படுமோசமான அரசியல் சூழலில் உங்கள் குடும்பத்தினரைப் பிரிந்திருந்து எவ்வாறு அரசியலில் ஈடுபடுகிறீர்கள் ?*

போரிடுவதற்கு இன்றைக்கு இளைய தலைமுறை தயாராக இருக்கிறது. ஆனால் அரசியல் துறையிலே இராஜதந்திர முறையிலே மனித உரிமை மீறல்கள் தொடர்பிலே குரல் எழுப்புவதற்கு புத்திஜீவிகள் தமிழீழ தேசத்தை நேசிப்பவர்கள் முன்வர வேண்டும். இதில் ஈடுபட்ட பலர் பல்வேறு காரணங்களால் ஒதுங்கி இருக்கிறார்கள். சலித்துப் போய் இருக்கிறார்கள். அதற்கு வலுவான காரணங்கள் இருக்கிறது. அதையெல்லாம் களைந்து அவர்களையெல்லாம் நாங்கள் ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். ஏனென்றும் எமது இனம் புத்திக் கூர்மைக்கும் அறிவுக்கும் பெயர்பெற்ற இனம். சர்வதேச அரங்கிலே எமது பிரச்சினை அதற்குரிய கவனத்தை ஈர்க்கவில்லை. அதற்கான காரணத்தை அகற்றியாக வேண்டும்.

*தேசம்: தமிழ் தலைமைகள் தங்கள் உறவுகளை பாதுகாப்பாக வெளிநாடுகளில் தங்க வைத்துவிட்டு மக்களை பகடைகளாகக் பயன்படுத்துகிறார்கள் என்றகுற்றச்சாட்டு பற்றி நீங்கள் என்ன கூற விரும்பகிறீர்கள் ?*

சிறிகாந்தா: என் தரப்பிலே ஏதாவது கேட்கிறீர்களா ?

*தேசம்: பொதுவாகவே கேட்கிறேன்.*

சிறிகாந்தா: 1996 ஆம் ஆண்டிலே என் குடும்பம் பல்வேறு துன்பதுயரங்களுக்கு ஆளான நிலையில் அவர்களுடைய உறவினர்கள் அழைத்தனர். அவர்களை நான் தடுக்க விரும்பவில்ல. ஏனென்றால் என்னுடைய பிள்ளகள் ரொம்ப கஸ்டப்பட்டு இருந்தார்கள். அதனை இங்கு விபரிக்க விரும்பவில்லை. அந்த நிலையிலே நான் அவர்களை வெளிநாடு செல்ல அனுமதித்தேன். ஆனால் நான் ஈழத்தில் தங்கி இருந்தேன். உங்களுடைய கேள்வி நிச்சயம் என்னைப் பற்றி அல்ல என்பது தெரியும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஏகபிரதிநிதி என்று சொல்கிறபோது ஒட்டுமொத்தமாக என்றைக்கும் அவர்கள் தான் பிரதிநிதி என்கிற ஒரு தவறான அர்த்தத்தைக் கொடுத்து விடும். அடுத்த தலைமுறை என்ன செய்யும் என்று எனக்குத் தெரியாது. அடுத்த தலைமுறையில் யார் யாரோ தலைவர்களாக வருவார்கள். அவர்களை நாங்கள் கட்டிப்போட முடியாது.

இன்றைக்கு அரசியல் என்பது 1980களில் இருந்து ஒரு சங்கடமான விவகாரமாகிவிட்டது. படித்தவர்கள் விசயம் தெரிந்தவர்களையெல்லாம் வேட்பாளர்களாக நிறுத்த கஸ்டப்பட வேண்டியுள்ளது. திறமைசாலிகளைத் தேடினால் அவர்களிடம் திறமை இருக்கிறது. நேர்மை இருக்கிறது. ஆனால் தயக்கமும் இருக்கிறது. ஆகவே இந்தச் சூழ்நிலையிலே தான் நான் உங்களுடைய கேள்வியை அணுகவிரும்புகிறேன். யார் மீதும் அநாவசியமாக சேறுபூச விரும்பவில்லை. அவரவர் கஸ்ரம் அவரவர்க்குத் தான தெரியும்.

இவற்றுக்கெல்லாம் ஒரு முடிவு வேண்டும் என்கிற விளிப்புணர்ச்சியின் விளைவாகத் தான் நாங்கள் கடந்த காலத்தை மறந்துவிட்டு த.வி.புலிகள் இயக்கத்திற்கு அரசியல்ரீதியாக ஆதரவைக் கொடுத்து அவர்களுடைய அரசியல் பலத்திற்கு மேலும் வலுவூட்டி அவர்களுடைய இராணுவ பலத்தை பேச்சுவார்த்தை மேசையிலே பேரம் பேசுவதற்கான ஆயுதமாக பாவித்து தமிழ் இனத்தினுடைய பிரச்சினைக்கு வெகு விரைவாக முடிவைக் கொண்டு வருவதற்கு நாங்கள் யோசிக்கிறோம்.

*தேசம்: தமிழ் தேசியக் கூட்டமைப்பு வி.புலிகளோடு இணைவதாக முடிவெடுத்த காலப்பகுதியில் ரெலொவும் ஆனந்தசங்கரி தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணியுமே வி.புலிகளின் ஏகபிரதிநிதித்துவத்தை நிராகரித்தன. வி.புலிகளின் ஏக பிரதிநிதித்தவம் பற்றி ரெலோவின் தற்போதைய நிலைப்பாடு என்ன ?*

சிறிகாந்தா: ஏகபிரதிநிதி என்ற வார்த்தையை எங்களுடைய தேர்தல் அறிக்கையிலே சேர்க்க வேண்டும் என தமிழ் காங்கிரஸ் கட்சி அடம்பிடித்த பொழுது அதை நாங்கள் மிகத் தீவிரமாக எதிர்த்தோம். அப்பொழுது நானும் கூட்டணி சார்பில் நண்பர் ஆனந்த சங்கரியும் இருந்தோம். அதற்குக் காணரங்கள் இருந்தன. ஜனநாயக அரசியல் பாரம்பரியத்திலே ஊறிப்போன எங்களுக்கு அந்த வார்த்தைப் பிரயோகம் அந்த அந்தஸ்து தேவையற்றதாகப்பட்டது. அனாவசியமானதாகப்பட்டது. இறுதியிலே அரசியல் பேச்சுவார்த்தைகளில் தமிழினத்தை த.வி.புலிகள் இயக்கம் மாத்திரமே பிரதிநிதித்துவப்படுத்த வேண்டும் என்கிற நிலைப்பாடே முன்னெடுக்கப்பட்டது. ஆனால் அது என்ன ?த.வி. புலிகள் மாத்திரம்தான் என்றால் ஏகபிரதிநிதி என்றுதான் அர்த்தம். ஏகபிரதிநிதி என்ற அந்தஸ்தை அவர்களுக்கு கொடுப்பதிலே எங்களுக்கு மறுப்பிருக்கவில்லை. அதை தேர்தல் விஞ்ஞாபனத்திலே உள்ளடக்கி ஏகபிரதிநிதி என்று சொல்வதைத்தான் நாங்கள் விரும்பவில்லை.

ஏகபிரதிநிதி என்று சொல்கிறபோது ஒட்டுமொத்தமாக என்றைக்கும் அவர்கள் தான் பிரதிநிதி என்கிற ஒரு தவறான அர்த்தத்தைக் கொடுத்து விடும். அடுத்த தலைமுறை என்ன செய்யும் என்று எனக்குத் தெரியாது. அடுத்த தலைமறையில் யார் யாரோ தலைவர்களாக வருவார்கள். ஒரு காலத்திலே சேர் பொன் ராமநாதன், ஜி ஜி பொன்னம்பலம், பிறகு செல்வநாயகம், அமிர்தலிங்கம், பிறகு இயக்கங்கள், பிறகு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் அரசியல் அரங்கிலே வளர்ந்து பிரபாகரன் தமிழீழத் தேசியத் தலைவராக மதிக்கப்படுகிறார். இப்படி மாற்றங்கள் வரும் அடுத்த தலைமுறையை கட்டிப்போட முடியாது.

ஆனால் நண்பர் ஆனந்தசங்கரி இன்று வேறொரு நிலைப்பாட்டிற்கு போயிருக்கிறார் என்றால் அது மிகவும் துரதிஸ்டவசமானது. அவர் எங்களோடு இருந்திருக்க வேண்டும். அதை ஏனென்று நான் விபரிக்க விரும்பவில்லை.

அவர் இப்படியான நிலைப்பாட்டிற்கு போனதற்கான சூழல் அவர் சார்ந்திருந்த கட்சிக்குள்ளே ஏற்பட்ட சில பிரச்சினைகளாகத்தான் இருக்க வேண்டும். தனக்கு நீதி வழங்கப்படவில்லை தான் ஒதுக்கப்படகிறேன் என்று உணர்ந்திருந்தால் அதற்காகத் தன் அடிப்படை அரசியல் நிலைப்பாட்டை அவர் மாற்றியிருக்கத் தேவையில்லை. கட்சிக்குள்ளேயே போராடி இருக்கலாம். கட்சியை உடைத்திருந்தால் கூட நாங்கள் கவலைப்பட்டிருக்க மாட்டோம். ஐந்தோடு ஆறாவதாக கூட்டமைப்புக்குள்ளேயே ஒரு கட்சியாக வைத்திருந்திருப்போம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

***தேசம்: அவருக்கு சமாதானத்துக்கான யுனஸ்கோ விருது வழங்கப்பட்டுள்ளதே ?***

சிறிகாந்தா: இது ஒரு பெரிய விசயமல்ல. இது எதற்காக கொடுக்கப்பட்டிருக்கிறது. யுனஸ்கோ கொடுத்திருந்தாலும் தெரிவுக் குழுவில் எந்தெந்த நாடுகளைச் சேர்ந்தவர்கள் இருந்தார்கள் ?

அவர் இன்றைக்கு தமிழினத்தின் எதிரிகளோடு சேர்ந்திருக்கிறார். அது அவருக்கு தவிர்க்கப்பட முடியாதவொரு நிலைமை. ஏனென்றால் எங்களுடைய அரசியல் அரங்கிலே இன்றைக்கு கோடு கிழிக்கப்பட்டிருக்கிறது. ஒன்று வி.புலிகளோடு இணைந்து தமிழினத்தின் அரசியல் அபிலாசைகளுக்காக உழைக்க வேண்டும். அல்லது வி.புலிகளுக்கு எதிராக சிறிலங்கா அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட வேண்டும். ஆகவே இங்கிருந்து கோட்டைத் தாண்டும் ஒருவர் சிறிலங்கா அரசின் மடியிலே தான் போய் விழுவார். வேறுவழியில்லை.

அரசுக்கு சில செல்லப்பிள்ளைகள் வேண்டும். நண்பர் டக்ளஸ் தேவானந்தாவைக் கொண்டு திரிகிறார்கள். ஹவானாவுக்கு இந்தியாவுக்கு. நண்பர் டக்ளஸ் தேவானந்தா கூட திருந்தினால் மனம் வருந்தினால் எங்களோடு வந்து இணைந்து கொள்வதிலே தடையில்லையென்பதில் எனக்கு நம்பிக்கையுண்டு.

***தேசம்: மூன்றாவது சக்தி ஒன்று பற்றி குறிப்பிட்டர்கள். இலங்கையில் இன்று ஏற்பட்டுள்ள இந்த மோசமான நிலைக்கு இந்த மூன்றாவது சக்தி இல்லாமல் போனதும் ஒரு காரணமாக இருக்கலாம். இந்த மூன்றாவது சக்தியை உருவாகாமல் தடுத்ததில் வி.புலிகளுக்கும் முக்கிய பங்கு உண்டு அல்லவா ?***

சிறிகாந்தா: மூன்றாவது சக்தியாகச் செயற்பட இடமிருக்கிறது. நண்பர் ஆனந்தசங்கரி அப்படிச் செயற்பட்டிருக்கலாம். ஆனால் அவர் அப்படிச் செய்ய முடியாமல் போய்விட்டது. ஏனென்றால் இன்றைக்கு கோடு கிழிக்கப்பட்டிருக்கிறது. யுத்தம் நடைபெறுகிறது. தெரிவுகள் கிடையாது. பாண்டவர் பக்கமா? கௌரவர் பக்கமா? தமிழினத்தின் பக்கமா? அரசின் பக்கமா? அந்த மெல்லிய கோட்டின் மேலே நின்று ஒருவர் அதிக காலம் தாக்குப்பிடிக்க முடியாது. ☑

SCUDAMORES SOLICITORS
Immigration and Asylum
Crime
Legal Aid
Housing
020 7644 0480
Email:raj@scudamores4solicitors.com
Argo House
Kilburn Park Road
London
NW6 5LF



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இலங்கையில் தமிழ் பேசும் சமூகங்களும் உறவுகளின் எதிர்காலமும் (1)



ரவி சுந்தரலிங்கம்

# தமிழர் - இஸ்லாமியத் தமிழர்களது உறவுகளின் தளங்கள்

இலங்கைத் தீவிலுள்ள இனப் பிரச்சனையை மொழிவாரியாகவே அணுகிட முடியும் என்பதில் நாம் அசையாத நம்பிக்கை கொண்டவர்களாக உள்ளோம். மொழிவாரியின்றி வேறு விதங்களில் இவ் இனப் பிரச்சனையை அணுகுபவர்கள் மேலும் சரித்திர விபத்துகளுக்கே தத்தம் சமூகக் கூட்டங்களை இட்டுச் செல்வர், என்ற தர்க்கீக வாதத்தில் பிழையினைக் காண முடியாதவர்களாக உள்ளோம்.

சிறீலங்கா என்று, சிங்கள தேசமாக சிங்கள மக்களுக்காக மட்டுமே, உத்தியோகபூர்வமாக சாசனங்களுக்கு மேல் சாசனங்களால் இலங்கைத் தீவினை சுவீகரம் செய்து கொண்ட சிங்கள - பெரும் தேசவாத, சிங்கள - பௌத்தவாத சோவனிச அதிகார வர்க்கங்கள். காலனித்துவ வெள்ளையர்கள் நிலம்விட்டு அகன்றதுமே தமிழ்பேசும் சமூகங்களுக்கு எதிரான கேந்திர நடவடிக்கைகளில் அவர்கள் இறங்கினர் என்பது தெரியாத விடயமல்ல.

வட கிழக்கு மாகாணங்களில் திட்டத்துடன் நடாத்தப்பட்ட சிங்கள குடியேற்றங்கள், சிங்களம் மட்டும் சட்டம், மலையகத் தமிழர்களது குடியுரிமைப் பறிப்பு, அவர்களது நாடு கடத்தல், காலா காலத்தில் திட்டமிட்டு முதலில் இஸ்லாமியத் தமிழருக்கு எதிராகவும் தொடர்ந்து மற்றவர்களுக்கு எதிராகவும் நடத்தப்பட்ட இனக் கலவரங்கள், என இன - ஒழிப்பு நடவடிக்கைகள் பல. இவை எல்லாம் தமிழ் பேசுவோரது பேரிலும் ஆள்வாதாக கூறிக் கொள்ளும் ஒரு அரசினது செயல் என்பதையும், அந்த அரசமைப்பைக் காப்பாற்ற தமிழ் இனத்துக்கு எதிரான போர் என் கூற்றுடன் ஜே.ஆர். ஜெயவர்த்தனவால் தொடக்க வைக்கப்பட்ட போரினை இன்றும் உக்கிரத்துட தொடரும் அதே அரசை, அதன் சரித்திரத்தை மாற்றி எழுதிட முடியாது.

தமிழ் பேசும் மக்களது போராட்டத்தில் விடுதலை புலிகளது காலா காலத் தவறுகளால், ஜனநாய இன்மையால், தமிழ் பேசும் சமூகங்களிடையே போராட்டத்திக்கான ஒற்றுமையை ஏற்படுத் முடியாமையால் மட்டுமின்றி ஏற்கனவே இருந் உறவுகளை பாழடைய வைத்துவிட்ட காரணத்தால் சிங்கள சோவனிச அரசு தமிழ் பேசுவோரத நண்பனாகி விடுவதல்ல.

அரசாங்கங்களுக்கும் (governments) அரச அமைப்புக்கும் (state - structure) இடையே உள் வித்தியாசங்களை புரியாதவர்களது, தம முயற்சிகளின் தோல்விகளின் விரக்திகளா சகலதையுமே நிராகரிக்கும் மனோநிலை கொண்டவர்களது, புலி அமைப்பினை மட்டுமே கொண்டு சரித்தித்தை பின்னோக்கிப் பார்த் எதிர்காலத்தை சிங்கள அரசமைப்புடனேயே பேசி கொள்ளலாம் என்ற கருத்தினை கொண்டவர்களது முயற்சிகளது சூட்சுமங்கள் என என்ற விசன கேள்விகளை நாமும் கேட்பதிலும் பார்க் அவர்களது பிசகிய கருத்துகளை நேரே முக கொள்ளுவது அவசியமானது.

அரசாங்கங்களின் விருப்புடனோ எதுவே புலிகளுக்கும் - அரசாங்கத்துக்கும் இடை ஏற்பட்ட சுனாமி உதவி அமைப்பு (PTOMS) என்பத அமுலாக்கலைத் தடுத்ததும், வட - கிழக்கி இணைப்பின் முடிவினை கொண்டு வந்தது சிங்கள - அரசமைப்பின் கருவிகளே என்பன நாம் அரசாங்கங்களிடம் இருந்து பிரித்துப் பார்த் உணர்ந்திட வேண்டும் என்பது இவர்களிடம் சுட் காட்டிடப்பட வேண்டியது.

சிங்கள மக்கள் மொழிவாரியாக இல்லா மதரீதியாகவும் தம்மை நிர்ணையம் செய்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

> தமிழ் பேசும் மக்களது போராட்டத்தில் விடுதலைப் புலிகளது காலா காலத் தவறுகளால், ஜனநாயக இன்மையால், தமிழ் பேசும் சமூகங்களிடையே போராட்டத்திக்கான ஒற்றுமையை ஏற்ப்படுத்த முடியாமையால் மட்டுமின்றி ஏற்கனவே இருந்த உறவுகளை பாழடைய வைத்துவிட்ட காரணத்தால், சிங்கள சோவனிச அரசு தமிழ் பேசுவோரது நண்பனாகி விடுவதல்ல.

முற்பட்டதனால் ஏற்பட்டுள்ள விளைவுகளை பூரணமாக உணர்ந்தவராகவும், அவற்றின் தாக்கங்களை அன்றாடம் அநுபவிப்பவர்களாகவும் உள்ளோம். சிங்கள பேரினவாத, சிங்கள - பௌத்தவாத சோவனிசத்தின் வளர்ச்சியால், சிறீலங்கா என்ற பிரத்தியேக அரச - அமைப்பின் தோற்றுவித்தலினால் அந்நியப்படத்தப்பட்டு, மொழிவாரியாக இனம் காணப்பட்டு, அரச சமூக ஒடுக்கு முறைகளால் ஒருமைப்படுத்தப்பட்ட பிறம்பான தமிழ் சமூகங்களை சேர்ந்தவர்கள் நாம்.

ஆகவேதான் மொழிவாரியான சர்ச்சைகளை உடமைப் பிரச்சனைகளாகவும், பிரதேச, மத ரீதியான சர்ச்சைகளை அந்த உடமைகளை ஊர்ஜிதம் செய்யும் சமூக - உரிமைப் பிரச்சனைகளாகவும் கருதுகின்றோம். உடமைப் பிரச்சனைகளை சிறிலங்கா என்ற அரச அமைப்புடன் உள்ள முரண்பாடாகவும், உரிமைப் பிரச்சனைகளை எம்முள்ளே உள்ள பல்சமூக முரண்பாடுகளின் ஜனாநாயக போராட்டங்களாகவும் கருதுகின்றோம்.

இவ்வுள் முரண்பாடுகளை போக்குவதற்கான போராட்டங்கள், அவை சமூக சமநிலையை மட்டும் ஏற்படுத்துவதற்காக அமையுமாயின் முற்போக்கானவை என்றும், இல்லாவிடில், அவை சிங்கள சோவனிச அரசை, எதிரியை பலப்படுத்துவதாகவுமே அமையும் என்றும் திடமாகக் கூறுகின்றோம்.

ஆனால், ஆக்க பூர்வமான ஜனநாயகப் போராட்டங்கள் எம்மகத்தே இல்லாது போகின் அவை நசுக்கப்படின் அவையும் அரச அமைப்பினை, தமிழ்பேசும் சகலரதும் எதிரியான அரசினை பலப்படுத்துவதாகும் என்பதையும்தான் சுட்டிக் காட்டுகின்றோம்.

இவ்வகை வரைவுகளை கொள்ளாது பிசகுபவர்கள் காரியங்களில் இறங்கும் போது தத்தமது சமூகங்களை, மீட்டெடுக்க முடியாத அளவுக்கு அச் சிங்கள சோவனிச அரசின் அமைப்பின் உள்ளே அடிமைகள் ஆக்கிடுவர் என்பதிலும் அசையாத தர்க்கீக நம்பிக்கை கொண்டவர்களாக உள்ளோம்.

ஜனநாயகம் என்பது எப்படியாக ஒரு கூட்டு முயற்சியோ, அவற்றின் அடிப்படையிலான கூட்டு முடிவுகளோ, அது போன்றதே தேசம் என்ற அரசியல் வரைவமைப்பும் அதனடியிலான ஸ்தாபனமும் என்கிறோம்.

இனவாரியின்றி, மத ரீதியிலும் இல்லாது, பிதேச வாதங்களையும் தாண்டிய மொழிவாரியான தீர்வுகளை உள்ளும் - புறமும் இலங்கை வாழ் சமூகங்கள் ஏற்றுக் கொள்ளும் போதே, இன உறவுகளின் புதிய வடிவங்களுக்கான வாய்ப்புகளும், அவற்றின் இளைகளும் எமக்குக் கிட்டும்.

இஸ்லாமிய மதத்தினைப் பின்பற்றுவோர் தமிழ் பேசுபவர்கள் என்று மட்டுமல்ல, அவர்கள் மிகப்பாரிய அளவில் 'தமிழர்களையே' தமது மூதாதையர்களாகக் கொண்டவர்கள் என்பதை மட்டுமல்ல, அவர்கள் வடக்கு-கிழக்கின் பூர்வீகக் குடிகள் என்றும்தான் கூறுகின்றோம்.

இஸ்லாம் என்பது ஒரு மதம் எனபதனை மட்டுமல்ல, நாடுகள் தேசங்கள் என்ற எல்லைகளை ஏற்றுக் கொள்ளாத மதவாதம் என்பதையும் மட்டுமல்ல, அரபினை தனது மொழியாகவும் கொண்ட மதம் என்பதையும் நாம் பூரணமாக ஏற்றுக் கொள்கிறோம்.

இஸ்லாம் என்ற அடையாளத்தை முன்நிறுத்தும் பல விதமான மொழிகள் பேசும் மக்கள் கூட்டங்களும், நாடு, தேசம் என்பவை மாயையான கட்டு அமைப்புகள் என நிராகரித்து, அநாவசியமான தேசப்பற்று, நாட்டுப்பற்று என்பவற்றை ஏற்க மறுப்பதுடன், தனக்கென்றே இஸ்லாம் தரும் பிரத்தியேகமான உலகத் தேசியத்தையும் (Internationalism) தரவிளைகிறது என்பதையும், அதன் முற்றான பேறுகளை பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பு இஸ்லாம் மதத்தைத் தழுவுவோருக்கு மட்டுமே உண்டு என்பதனையும் நாம் நன்கு புரிந்து கொள்கிறோம்.

இஸ்லாம் என்ற அடையாளத்தை முன்நிறுத்தும் மனிதர்கள் ஓரிடத்தில் சந்திக்கும் போது அவர்கள் மொழிகள், தேசங்கள் என்ற 'கட்டுக் கதைகளை' மீறிய ஒன்றான சமூகமாக தம்மை வர்ணிப்பதை நாம் அநுபவங்களாலும், அதற்கான இஸ்லாமின் சிந்தனா வாதங்களாலும் புரிந்து கொள்கின்றோம்.

சமூகங்கள் என்பவை தேசங்கள் அல்ல என்பதையும், தேசங்கள் என்பவை வெறும் மதவாரியான இனங்கள் அல்ல என்பதையும் அதற்கான எமது வாதங்களை தர்க்கீக ரீதியில் புரிந்து கொண்டமையால், 'நாம்' என்று சமூகக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

- குடும்ப - கூட்டுறவுகளால் எழும் 'சமூக - மனோவியல் நிலைப்பாடுகளை' மட்டுமே கொண்டு ஒரு சமூகத்தினர் தம்மையும் ஒரு இனம் என்று கூறும் போது வார்த்தைகள் இழந்தவராக உள்ளோம்.

'நாம்' என எம்மை வர்ணிப்புகளுடன் வரையறுத்தி டும் போது ''நீங்கள்'' என்பவர்கள் ''நாங்கள் அல்லாதவர்'' என்ற வரையறுப்பினையும் தந்து விடுகிறோம் என்பதை தர்க்க ரீதியில் (logic) ஏற்றுக் கொள்ளும் மனப்பாங்கும், புத்தி ஜீவித - நேர்மையும் (intellectual honesty) கொண்டமையால், எம்மையும் நாம் தேசம் என்று கூறும் போது, எமது சுயநிர்ணைய உரிமைகள் எனும் போதும், அவை எமைச் சூழ்ந்த நாடுகள், தேசங்கள் மக்கள் கூட்டங்களுடன் நடைமுறையில் உருவாக்கிக் கொள்ளும், நீதி - சமாதனம் என்ற கோட்பாடுகளுக்குள் சுயமாக அடங்கிய இயங்கியல் உறவுகள் என்பதையும் பூரணமாக ஏற்றுக் கொள்கிறோம்.

தேசம் என்பது ஒரு அதிகார வர்க்கத்தின் பிரேரணை என்பதை ஏற்றுக் கொள்ளும் போதிலும், மூலதனத்தை உலகமயப்படுத்தும் இன்றைய சூழலில், தேசம் என்பது குறைந்தபட்சம் சிங்கள அல்லது தமிழ் பேசும் மக்களது அடையாளமாகவும், மிஞ்சினால் அவர்களது கருமங்களை தாமே நிர்வாகம் செய்யும் வகைகளைத் தரும் ஏதுவாகவும், அதனையும் மிஞ்சினால் உலக மூலதன - தொழிற் சந்தையில் தனது சமூகத்தவரின் எதிர்பார்ப்புகளை நேரடியாகவோ, மற்றய தேசங்களுடன் கூட்டாகவோ பாதுகாத்துக் கொள்ளக் கூடிய ஸ்தாபனமாகவும் கருத வேண்டி உள்ளோம்.

இவ்வழியில் மட்டுமே, இருந்து பார்க்கும் போது 'தேசம்' என்பது முன்னேற்றகரமான பிரேரணையாகவும், மதத்ததால் கிட்டும் எதிர்பார்ப்பு களைவிட பல நூற்றாண்டுகள் முன்னேறிய புதுமை தருவனவாகவும் மக்களுக்கு புத்துயிர் தருவனவாகவுமே நாம் கருதுகின்றோம்.

இவ்வேளையில், எமது பெயரில் இன்று இடம் பெறும் போரானது இவ்வழியில் இருந்து எமை விலக்கி, திக்கற்று உள்ளது என்பதையும் நாம் ஒத்துக் கொள்கிறோம்.

இங்கே தேசம் என்பதற்கு மொழிவாரியாக உருவாகும் நிலைப்பாடுகளை அவற்றின் அவசியத்தை, மார்க்சிச அல்லது முதலாளித்துவ வரைவு இலக்கணங்களால் மீண்டும் மீண்டும் மேற்கோள் காட்டி எமக்கு ஆதாரம் தேட வேண்டியவர்கள் நாமல்ல.

தேசம் என்பது உடைமை என்றும், அதனது பூரணவாய்ப்பை நுகர்வதற்கு ஏதுவான வழிகளையே எமது உரிமைகள் என்றும் கூறுகின்றோம். மேலும் அவை ஒவ்வொரு சமூகத்துக்கும் உரித்தனவை என்றும் பகர்கின்றோம்.

தேசம் வேறு நாடு வேறு. தேசம் என்ப அடிப்படையில் மொழிவாரியானது என்பதையு நாடு என்பது பல தேசங்கள் சுயமாக சேர்ந் அல்லது வலுக்கட்டாயமாக இணைக்கப்பட் அல்லது இலங்கைத் தீவைப் போன்று காலனித்து காலத்தின் எதேச்சகரமான நடத்தையி விளைவுகளாக இருக்கும் கூட்டு என்பதைய உணர்ந்து கொள்கிறோம்.

எனவே, அவ்கான் என்பதை ஒரு நாடாகவு அங்குள்ள பஸ்துன், பாசி, உகுன், உஸ்பெக் போன் மக்கள் சமூகங்களை தேசங்களாகவும் கண் கொள்ளும் திடமான அறிவையும் பெற்றுள்ளோ 'அவ்கான்' என்பது அவ்கனிஸ்தானின் பிரஜைகள் எ பொருள்படும் என்பதையும் அவ்கானியர்களிடமிருந் அறிந்து கொண்டுள்ளோம்.

மதரீதியாக தேசங்களுக்கான இனங்கை தனித்துவங்களை நிர்ணையம் செய்ய முடியுமானா சாதி, பிராந்திய, பாலியல் ரீதியிலும் சமூகங்கை இனம் எனவும் நிர்ணயம் செய்ய வேண்டும் என் கோரிக்கைகள் என்னாவது, என்ற கேள்வியையும்தா நாம் சந்திக்க வேண்டியிருக்கும் என்பதையும் நா கருத்தில் கொண்டுள்ளோம்.

சமூக நியாயங்களுக்கும், சமத்துவத்துக்கு முன்நிற்கும் நாம் மனிதக் கூட்டங்களிடையே ஏற்படு சில வகைப்படுத்தல்களை பரிமாண வளர்ச்சியாகவு சிலவற்றை சமநிலையை ஏற்படுத்துவற்கா தற்காலிக உபாயமாகவுமே கருதுகின்றோம்.

இலங்கையில் இடம்பெறும் சர்ச்சைக இனவாரியானது என சமூகவியலாளர்கள் கூறு போது, அதனுள் இஸ்லாமியச் சமூகமும் ஒரு இன எனக் கருதப்படின் அந்த 'இனத்துக்கும்' வேறெ ஸ்தாபனத்துக்கும் இடையே முரண்பாடுக உள்ளன என்ற கேள்வியை நாம் எம் மு நிறுத்துகின்றோம். அவை சிறீலங்கா என்ற அ - அமைப்புடனா? இல்லை, சிறீலங்காவை ஆ வரும் அரசாங்கங்களுடனா? சிங்கள மக்களுடன

தேசம் என்பது உடைமை என்றும், அதன பூரணவாய்ப்பை நுகர்வதற்கு ஏதுவான வழிகளையே எமது உரிமைகள் என்றும் கூறுகின்றோம். மேலும், அவை ஒவ்வொரு சமூகத்துக்கும் உரித்தனவை என்றும் பகர்கின்றோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அல்லது அவர்களது சிங்கள - பௌத்த வாதத்தில் அமைந்துள்ள அரச - ஸ்தாபனங்களுடனா? அவை தமிழருடனா? மொழிவாரியானஹ சகல தமிழ் பேசும் மக்களையும் உட்படுத்திய ஜனநாயகக் கூட்டுத் தேசியத்துடனா? அல்லது பிராந்தியங்களில் உள்ள சமூக - வர்க்க உறவுகளுடனா? ஏன், தமிழ் இந்துக்கள் அல்லது கிறீஸ்தவர்களுடனா?

இவற்றின் பதில்களைத் தேடும்போது, 'தமிழ் தேசியத்துடன்' உள்ள முரண்பாடுகள் என்றால், அவை 'புலிகள் செய்த அநியாத்தினாலேயே' என்ற ஆரம்ப வாதங்களுடன் தொடங்கும் போது அற்றினை நாம் எடை இல்லாதவையாகவே கருதுகின்றோம். ஏனெனில், சேர். பொன். இராமனாதனின் சூழ்ச்சியை கவிழ்த்திட 'மகா போராட்டமே' நடத்தப்பட்டது என்பது தமது வாதங்களிடையே இஸ்லாமியவாதிகள் (Islamists) தரும் இடைநடுக் கூற்று. அப்படியாயின், இஸ்லாமிய - தமிழர் என்ற முரண்பாடுகள், இரு சமூகங்களதும் அந்நியப்பாட்டிற்கான காரணிகள், என்றோ உருவாகி விட்டன என்பதே உண்மையாகிடும்.

> இஸ்லாமியச் சமூகமும் ஒரு இனம் எனக் கருதப்படின் அந்த 'இனத்துக்கும் வேறெந்த ஸ்தாபனத்துக்கும் இடையே முரண்பாடுகள் உள்ளன என்ற கேள்வியை நாம் எம் முன் நிறுத்துகின்றோம். 'தமிழ் தேசியத்துடன் உள்ள முரண்பாடுகள் என்றால், அவை 'புலிகள் செய்த அநியாத்தினாலேயே என்ற ஆரம்ப வாதங்களுடன் தொடங்கும் போது அற்றினை நாம் எடை இல்லாதவையாகவே கருதுகின்றோம்.

எனவேதான், மக்களின் தற்காலிக அமைப்புகளை மட்டும் அடிப்பொருளாக அல்லது சாட்சியமாகக் கொண்டு ஒரு சமூகத்தை இனமாக அடையாளப் படுத்த முடியாது என்கிறோம்.

இவ்வாறு தமிழ் - இஸ்லாமிய சமூகங்கள் இடையே உருவாகிவந்த அந்நியப்பாட்டிற்கு அடித்தளத்தில், மேற்கூறிய சிறுபிள்ளைத் தனமான கதைகளைவிட, அடித்தள சமூக - பொருளியல் காரணிகள் உண்டு என நாம் புரிந்து கொள்கிறோம். அவை பொதுவில் உற்பத்திச் சாதனங்களுடன், அவற்றின் உடமைக்கான உறவுகளில் தங்கியவை. இந்நிலைப்பாடு கிழக்கிலேயே கூர்மையாக இருந்து வந்துள்ளது என்பதையும் அறிவோம். வட - கிழக்கில் வாழும், வாழ்ந்த இஸ்லாமிய தமிழர்களில் பெரும்பாலானோர் நில - உரிமையற்ற குடியானவர்கள் என்பதையும் நாம் அறிவோம். புத்தளத்துக்கு விரட்டப்பட்டவர்களது நிலை இந்நிலைமையை மேலும் ஊர்ஜிதம் செய்கின்றது என்றும் புரிந்துள்ளோம்.

எனவே, சாதிகளுக்கும் அதிகார வர்க்கங்களுக்கும் இடையேயான முரண்பாடுகளின் அதே வடிவங்களையன்றி வேறெதையும் நாம் இங்கு காணத் தவறுகின்றோம். இங்கு ஒடுக்கப்படும் சமூகம் இஸ்லாமிய மதத்தினை பின்பற்றுகின்றது என்பதை தற்செயலானது என்றே கணிப்பீடு செய்கின்றோம்.

சாதி எனும் வர்க்க அடிமைத் தனத்தையே சமூக - வடிவமைப்பாகக் கொண்டமைந்த தேசங்களும் சமூகங்களும், அவை இந்துக்கள், கிறீஸ்தவர்கள் பௌத்தர்களாயினும் கொடுமைகள் இழைப்பதில் சளைப்பதில்லை என்பதையும்தான் நாம் என்றென்றும் காண்கிறோம். தாழ்த்தப்பட்ட சமூகத்தவர் அமைப்புகள் அணிகளுடாக, சில வேளைகளில் ஆயுததாரிகளாகவும் தமது சமூக அங்கத்துவத்தை நிர்மாணம் செய்து கொள்ளும் போது, 'உயர் - சாதிய' அதிகார வர்க்கங்கள் அம்மாற்று நிலைமைகளை உள்வாங்கியும் கொள்கின்றன என்பதையும் தான் கண்டு கொள்கிறோம். இந்தியாவின் சாதியக் கொடுமைகளையும், அதே தருணம் திராவிடப் பகுதிகளில், குறிப்பாக தமிழ்நாட்டில் அரசியல் சாசன, சமூக, பொருளாதார சீர்திருத்த நடவடிக்கைகள் திராவிட - அரசியல் அமைப்புகளால் எடுக்கப்பட்டு வருவதையும், அவற்றாலான சமூகத் தாக்கங்கள், பொருளாதார சீரமைப்புகள் என்பவற்றையும் நாம் உன்னித்து அவதானித்து வருகின்றோம்.

இவ்வழியில் தமிழ்பேசும் மக்களது எந்த சமூகப் பிரிவினருக்கும் தகுந்த பாதுகாப்பினையும், நம்பிக்கையையும் தரும் அரசியல் படிமாணங்களை முன்வைப்பதும் அன்றைய தேவைகளை நிறைவேற்றி சமூகங்களிடையே சகல விடயங்களிலும், உற்பத்தி உறவுகள் உட்பட, சமநிலையை உருவாக்கிடத் தேவையான நடவடிக்கைகளையும் அவற்றிக்கு ஏதுவான ஸ்தாபனங்களைக் கட்டுவதும் அவசியம் என்பதை நாம் கடமையாகக் கொள்ள வேண்டும் என்கின்றோம். மொழிவாரியாக உருவாக்கப்படும் இனங்களிடையே உள்ள சமூக முரண்கள் சீர்திருத்தங்களாலோ, புரட்சிகளாலோ ஏற்படுத்தப்படும் ஸ்தாபன ரீதிகளிலேயே தீர்த்துக் கொள்ளப்பட முடியும்.

மொழிவாரிக்கு அப்பாற்பட்ட இனரீதியாக இச் சமூக முரண்பாடுகள் அமையின், அவற்றினை வெறும் ஸ்தாபன ரீதியினால்மட்டும் தீர்த்துக் கொள்ள முடியாது. இதற்கு இலங்கையின் இனப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இது எங்கள் முதுசச் சொத்து. ஆனால் நீங்களும் அங்கே வாழலாம் என்ற தாராள மனப்பாங்கையையே இவர்களது இஸ்லாமிய தமிழர்கள் குறித்த அரசியற் திட்டமாகக் கொண்டதால் வந்த எதிர் விளைவுகளையே இன்று இஸ்லாமியவாதிகள் சரித்திர முரண்பாடாக கற்பிக்கிறார்கள். இதன் ஒரு போக்கே புலிகளை யாழ் குடாவிலிருந்த இஸ்லாமிய தமிழர்களை நாடுகடத்தும் மனப் பாங்கிற்கும் இட்டுச் சென்றது.

போரே தகுந்த உதாரணம் என நாம் சொல்லிட வேண்டியதில்லை.

இவ்வகையில் தமிழர் - இஸ்லாமியர் என்றும், இரு இனங்களாக அந்நியப்பட்ட மக்களிடையேயான முரண்பாடுகள் என இஸ்லாமியவாதிகள் ஒப்பிப்பது உண்மையாகின், அவற்றினை உரிமைகளின் பேரில் தீர்த்துக் கொள்ள முடியாதது ஆகிவிடும். ஏனெனில், அதுவே உண்மையென உருவாகின் அம் முரண்பாடுகள் உடமைக்கானதாகிவிடும். அதாவது, தமிழ் பேசுவோருக்கும் சிங்கள் அரச - அமைப்புக்கும் இடையேயான முரண்பாடு போலாகிவிடும்.

ஆகவேதான் சமுகத்தின் சிந்தனாவாதிகள், எந்த எந்த வர்க்கங்களைப் பிரதி செய்கிறார்கள், அவர்களது வர்க்கச் சிந்தனைகளை தமது அதிகாரத்தைக் கொண்டு எவ்வாறு சமூகச் சித்தாந்தங்களாக மாற்றிட முனைகிறார்கள் என்பதை நாம் உற்று அவதானிப்பவர்களாக உள்ளோம்.

சிங்கள மக்களது தேசிய நிர்மாணங்களை, குறுகிய சிங்கள - பௌத்த வாதங்களுடன் எங்ஙனம் குட்டி முதலாளித்துவ வர்க்கங்கள் கடத்திச் சென்று அவர்களது கோணலான வளர்ச்சிக்கு கொம்பிட்டார்களோ, அதுபோலவே தமிழ்பேசும் மக்களது ஒட்டு மொத்தமான உடமைப் போராட்டத்தை எங்ஙனம் வடமாகாண மத்தியதர அதிகார வர்க்கத்தினர் வெறும் தமிழர்களது போரென தமது அதிகார சிந்தனா வாதங்களால் கைகடத்திச் சென்றதுடன் ஜனநாயக அழிவுக்கும், இலங்கை வாழ் இனங்களின் உறவுகளின் வீழ்ச்சிக்கும் எமையெல்லாம் இட்டுச் சென்றார்களோ, அதே போன்ற கருமத்திலேயே இஸ்லாமியவாதிகளும் உள்ளனர் என்பது பட்டவார்த்தனம்.

ஆனால், இவ்வாறான சரித்திர விபத்துகளை எப்படித் தடுப்பது? என்பது பாரிய கேள்வி. எம் எல்லோர்க்கும் தெரியும், ஈரோஸ் அமைப்பினைத் தவிரத்த மற்ற அமைப்புகளுக்கும் புலிகளிக்கும் இடையே இஸ்லாமிய, மலையகத் தமிழர்கள் குறித்தான சித்தாந்த வேறுபாடுகள் இருக்கவில்லை என்பது. இவ்விரு தமிழ் பேசும் சமூகங்களும் தனித்துவமானவை, ஒரு தேசியத்துள் உட்படாதவை என்பதே அவர்களது விளக்கம். ஈரோஸின் தொடக்காலத்து மாணவர் அமைப்பான ஈழ மாணவர் பொது மன்றம் (GUES), ஈரோஸிலிருந்து நண்பர் பத்மநாபா தலைமையில் பிரிந்து போய் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியை (EPRLF) தோற்றுவித்த போது இந்த நிலைப்பாட்டை விளக்கியதுடன், ஈரோஸினது தமிழ்பேசும் மக்களது கூட்டுத் தேசியம் முரண்பாடானது என்றும் வர்ணித்திருந்தனர். இருந்தும், புலிகள் உட்பட, இந்த அமைப்புகள் யாவும் இஸ்லாமிய, மலையகத் தமிழர்களிடையே ஊடுருவி ஆட்சேகரிப்பு நடவடிக்கைகளில் இறங்காது போயிடவில்லை.

தனித்துவமான இனங்களிடையே பிறத்தியாருக்கு என்ன வேலை என்பது எமக்கு முரண்பாடான விடயமாகவே உள்ளது. மேலும் அவர்கள் பிறம்பானவர்கள் என்று கூறிய போதிலும், அதே தருணம் வடக்கு கிழக்கை பூர்வீக தமிழரது பிரதேசமாக முன்வைப்பதால் இடம்பெறும் பிறளுபாடுகள்பற்றி இவர்கள் கவனம் கொண்டதாகவும் தெரியவில்லை. ‘இது எங்கள் முதுசச் சொத்து. ஆனால் நீங்களும் அங்கே வாழலாம்’ என்ற தாராள மனப்பாங்கையையே இவர்களது இஸ்லாமிய தமிழர்கள் குறித்த அரசியற் திட்டமாகக் கொண்டதால் வந்த எதிர் விளைவுகளையே இன்று இஸ்லாமியவாதிகள் சரித்திர முரண்பாடாக கற்பிக்கிறார்கள். இதன் ஒரு போக்கே புலிகளை யாழ் குடாவிலிருந்த இஸ்லாமிய தமிழர்களை நாடுகடத்தும் மனப் பாங்கிற்கும் இட்டுச் சென்றது.

இஸ்லாமியத் தமிழர்கள் வடக்குகிழக்கின் பூர்வீகக் குடிகள் என யாவரும் ஏற்றிருந்தால் இத் தவறுகள் நடைபெற்றிருக்குமா? அவர்களுக்கும் அந்த நிலம் சொந்தம் என்று ஏற்றுக் கொண்டால் நாம் யாருடன்தான் எமது உடமைகளாக்காகப் போராடிட நேரிடும்? சிங்கள - அரச - அமைப்புடனா அல்லது, தமிழ் பேசும் சமூகங்களிடையேயா? ☑

இக் கட்டுரை “தேசம்” சஞ்சிகையால் 2007 பங்குனி 10ல் நடத்தப்பட்ட “தமிழ் - முஸ்லீம் இனஉறவுகள்” என்ற கருத்துரையாடலை நோக்கித் தயாரிக்கப்பட்டு பின் விசாலப்படுத்தப்பட்டு உள்ளது. இக்கட்டுரை தமிழ் - முஸ்லீம் இன உறவுகள் தொடர்பான அரோக்கியமான விவாதத்தை ஆரம்பிக்கும் நோக்குடன் வெளியிடப்படுகிறது. உங்கள் கருத்துக்களை எழுத்தில் வைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நட்சத்திரன் செவ்விந்தியன்



# "ஈழம் என்கிற நாடு இலங்கையின் வடக்கு கிழக்கில் ஏற்கனவே உருவாகியுள்ளது."

சேரன்.

# "ஓ - - - - ம் உடையார் இடுப்பில சலங்கையைக் கட்டிக்கொண்டு"

யாழ்ப்பாணத்து நாட்டார் சொல்வழக்கு.

2006ம் ஆண்டு வெளிவந்த ஸ்டீபன் ஸ்பீல்பேக்கின் முனீக் (Munich) என்ற திரைப் படத்தில் பலஸ்தீன தீவிரவாதிகளுக்கும் இஸ்ரேலிய மொசாட் முகவருக்கும் ஏக காலத்தில் பணத்துக்காக தகவல்களை விற்கிற ஒரு மாபியாக் கும்பல் உறுப்பினன் கூறுவான். "ideologically we are promiscuous" என்று. உருத்ரமூர்த்தி சேரனின் இதுகாலவரையான எழுத்துக்களையும் பேட்டிகளையும் படிப்பவர்கள் சேரனும் குறித்த மாபியாக் கும்பல் உறுப்பினனைப் போல ideologically promiscuous ஆனவரே என்பதைக் கண்டுகொள்வார்கள்.

1999ம் ஆண்டு அவர் வழங்கிய 'காலச்சுவடு' மற்றும் 'மூன்றாவது மனிதன்' பேட்டிகளில் ஒரு நடுநிலமையாளராக இருந்து விடுதலைப் புலிகளையும் இலங்கை இந்திய அரசாங்கங்களையும் மிகச்சரியாகவே விமர்சித்திருந்தார். 2002இல் தனது தனிப்பட்ட நலன்களுக்காக புலிகளுக்கு வக்காலத்து வாங்க வேண்டிய தேவை சேரனுக்கு. யாழ் பல்கலைக்கழகத்துக்கு போய் அங்கு ஒரு விரிவுரையாளராக வரவேண்டிய அதேநேரம் புலி ஆதரவாளர்களின் செல்வாக்குக்கு உட்பட்ட கனடாவில் உள்ள மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக கல்லூரியிலும் தனது நாட்டாண்மையைக் காட்ட வேண்டும். உடனே புலி ஆதரவாளராக 2002இல் தீரா நதியில் புலிகளைப் பற்றி புகழ்ந்து சொல்லி தனது முன்னைய பேட்டிகளோடு முரண்பட்டார். இப்போது 2005 நவம்பர் மாத திசைகள் இணைய இதழில் சேரன் வழங்கிய பேட்டியில் புலிகளை விமர்சிப்பதை நாசூக்காகத் தவிர்த்திருக்கிறார்.

ஜோர்ஜ் புஷ் இனுடைய கூட்டங்களுக்கு கண்டிப்பாக அழைக்கப்பட்டவர்களே வரலாம். ஏறத்தாழ அதனைப்போலவே தன்மீது மிகுந்த அபிமானம் வைத்திருக்கிற தன்னுடைய தாசர்கள் அல்லது சீடர்களுக்கே சேரன் பேட்டி வழங்குவார். இதனால் நேர்காணல் மீது முழுமையான கட்டுப்பாட்டை சேரனே வைத்திருப்பார். பேட்டி காணுகிற தாசர் சேரனைப் பற்றிய அறிமுகத்தில் உச்சி குளிர்ந்து புலம்புவார்கள்.

இந்தப் பேட்டியில் தான் முன்னர் யோர்க்கில் பேராசிரியராக இருந்ததாகவும் இப்போது விண்சர் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக இருப்பதாகவும் புழுகித்தள்ளி உள்ளார். உண்மையில் வின்சர் பல்கலைக்கழகத்தில் சேரனின் தொழில் Assistant Professor என்பதாகும். வட அமெரிக்கப் பல்கலைக்கழகங்களில் விரிவுரையாளராக தொழிலை ஆரம்பிப்பவர்களையே Assistant Professor என்று குறிப்பிடுவது வழக்கம். Assistant Professor க்கும் Professor க்கும் இடையே Associate Professor (இணைப்பேராசிரியர்) என்கிற இன்னொரு பதவி உண்டு. சேரனின் குறித்த பல்கலைக்கழகத்தொழில் நிரந்தரமானதும் (Tenure) அல்ல. உண்மையில் ஒரு பேராசிரியராக ஒருவர் வரவேண்டுமென்றால் குறைந்த பட்சம் 12 வருட பல்கலைகழக உழைப்பு உடையவராகவும் அதே காலப்பகுதியில் காத்திரமான ஆராய்ச்சிகளும் பிரசுரங்களும் செய்தவராகவும் இருக்க வேண்டும். யோர்க் பல்கலைக்கழகத்திலும் சேரன் ஒருபோதும் பேராசிரியராக இருக்கவில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நிலமை இவ்வாறு இருக்க எவ்வளவு சுலபமாக தமிழர்களின் காதில் தான் ஒரு பேராசிரியர் என்று பூச்சுற்றுகிறார் சேரன்.

திசைகள் பேட்டியானது வழங்கப்பட்ட முறையானது விடுதலைப் புலிகள் மீதான சேரனின் புது விசுவாசத்தை சொல்லாமல் சொல்லி உறுதிப்படுத்துவதை அடிப்படையாகக் கொண்டது. இலங்கை அரசையும் அரசாங்கங்களையும் மிகக்கடுமையாக விமர்சிக்கிற சேரன் அதேயளவு கடுமையாக விமர்சிக்கப்பட வேண்டிய புலிகளை அவ்விதம் செய்யவில்லை.

சேரன் ஒரு இடத்தில் பின்வருமாறு கூறுகிறார்.

*"இலங்கை அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் இப்பொழுது ஒரு நிழல் யுத்தத்தை நடத்தி வருவதை எல்லோரும் அறிவர்.*

*குறிப்பாக புலிகள் அமைப்பிலிருந்து கருணாவும் அவரது குழுவினரும் பிரிந்த பிற்பாடு பெரும் மாற்றங்கள் ஏற்பட்டன. கருணாவும் அவரது குழுவினரும் இலங்கை அரசாங்கத்தின் உளவு சேவை, ரகசியப்படையினருடன் சேர்ந்து கொண்டு கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் புலிகளையும் அவரது ஆதரவாளர்களையும் கொன்று வருவதும் இதற்குப் பதிலடியாக கருணா குழுவினரையும் அவரது ஆதரவாளர்களையும் இலங்கை அரசாங்கத்தின் வேவுப்படையினரையும் விடுதலைப்புலிகள் தொடர்ச்சியாகக் கொன்று வருவதும் நடந்து வருகிறது"*

*"போர்நிறுத்தம் துவங்கிய கால கட்டத்தில் அரசியல் ரீதியான நெகிழ்ச்சிப் போக்குகளை புலிகள் காட்டியிருந்தாலும்*

*கருணா அணியினரின் பிளவுக்குப் பிற்பாடு பழையபடி இறுக்கமான ஒரு நிலைப்பாட்டுக்கு அவர்கள் சென்றுவிட்டதாகத் தோன்றுகிறது"*

மேலே உண்மையை மிக நுணுக்கமாக சேரன் திரிக்கிறார். போர் நிறுத்த ஒப்பந்தம் செய்யப்பட்டது 2002 பெப்பிரவரியில். கருணா குழுவினர் பிரிந்தது ஏப்பிரல் 2004இல். 2002 பெப்பிரவரியிலிருந்து 2004 ஏப்பிரல் வரை (அதாவது கருணா பிரியும் வரை) இலங்கை இராணுவத்தில் உள்ள தமிழர்கள், இலங்கை இராணுவத்தின் புலனாய்வு பிரிவினர், நிராயுத பாணிகளான EPRLF வரதர் அணி, PLOTE, EPDP என்பவற்றின் உறுப்பினர்கள், முஸ்லிம் பொதுமக்கள் ஆகியோர் உள்ளிட்ட 70க்கு மேற்பட்டவர்களை கொலை செய்தது புலிகளே. இதைவிட கட்டாய ஆட்சேர்ப்பு, ஆட்கடத்தல், கப்பம் பெறுதல் என்பவற்றையும் புலிகள் இக்காலத்தில் ஒழுங்கு முறையாகச் செய்துவந்தார்கள்.

இவை எல்லாவற்றையும் விட முக்கியமானது 2002 ஜுன் மாதத்தில் கிழக்கு மாகாணத்தில் (மூதூர் மற்றும் வாழைச்சேனை முதலிய இடங்கள்) புலிகள், முஸ்லீம்கள் மீதான ஒரு இனக்கலவரத்தை ஆரம்பிப்பதற்கு முயன்றார்கள். இலங்கை அரசாங்கமும் முஸ்லீம் தலைமைத்துவமும் மிகுந்த பொறுப்புணர்வோடு நடந்து கொண்டதால் ஒரு இனக்கலவரத்தை தவிர்த்துக்கொண்டனர். எனினும் பல முஸ்லீம் பொதுமக்கள் இதன்போது புலிகளால் கொல்லப்பட்டோ காணாமலோ போயிருக்கிறார்கள். (பார்க்க http://www.uthr.org/SpecialReports/spreport14.htm) இவ்வளவு மோசமானதும் அதிகளவானதுமான யுத்தநிறுத்த மீறல்களை புலிகள் செய்ததையும் நிழல் யுத்தத்தை ஆரம்பித்து வைத்தவர்கள் புலிகளே என்பதையும் சேரன் சாதுரியமாகத்தவிர்த்து விட்டார். இதைவிட கருணா பிரிந்த பின்னர்கூட விடுதலைப் புலிகள் பதிலடியாகத்தான் கருணா குழுவினரையும் அவரது ஆதரவாளர்களையும் கொல்லத் தொடங்கினார்கள் என்ற தொனிபடக் கூறுகிறார் சேரன். ஆனால் உண்மை அதற்கு மறுதலையானது.

கருணா பிரிந்து சென்றதே விடுதலைப் புலிகள் உட்கட்சி ஜனநாயக விழுமியங்கள் அற்ற கட்டமைப்பாக இருப்பதனால்தான். விடுதலைப் புலிகள் இயக்கத்தின் ஆரம்பத்திலிருந்தே தனது தலைமைக்கு சவால் தரக்கூடும் என்ற அச்சத்தில் மைக்கேல், பற்குணம், மாத்தையா போன்ற விடுதலைப் புலி உறுப்பினர்களை கள்ளக்கேஸ் போட்டுக் கொன்றவர் பிரபாகரன். இதனைவிட செல்லக்கிளி, விக்டர் போன்றவர்களின் கொலையிலும் குட்டிமணி முதலியோரின் காட்டிக்கொடுப்பிலும் பிரபாகரனே காரணமாக இருந்ததாக பலரால் சந்தேகிக்கப்படுகிறது. சிங்களவர்களிடமிருந்து மாநில சுயாட்சிக்குமேலாக தமிழீழம் கேட்டுப் போராடுகிற பிரபாகரன் குறைந்த பட்சம் கிழக்குக்கும் விடுதலைப் புலிகளுக்குள்ளும் அதிகாரப் பரவலாக்கம் கேட்ட கருணாவை அடக்க விழைந்ததோடு இன்னொரு தேசிய இனமான முஸ்லீம்களையும் கோரமாக அடக்குகிறார். இது விமர்சிக்கப்பட வேண்டிய விடயமாக சேரனுக்கு தெரியவில்லை.

பேட்டியாளரான லதா சேரனைப் பற்றிய அறிமுகத்தில் இலங்கை அரசியல் சமூகவியல் குறித்து நடுநிலமையான விமர்சனங்களை சேரனால் வைக்கமுடிகிறது என்கிறார். சேரனும் பின்வருமாறு கூறுகிறார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

*"கடந்த சில ஆண்டுகளாக ஈழத்து அரசியல் தீவிரமான இரண்டு முனைகளைக் கொண்டதாக மாறிவிட்டது. ஒன்று புலி ஆதரவு. இன்னொன்று புலி எதிர்ப்பு. இந்த இரண்டுக்கும் இடையில் சுதந்திரமான கருத்துக்களையும் சுதந்திரமான நிலைப்பாட்டையும் எடுப்பவர்கள் மீது மிகுந்த தாக்குதல்களும் விமர்சனக்களும் வைக்கப்படுகின்றன............ அரசியல் விமர்சனம் என்பதை கறுப்பு வெள்ளையாகத்தான் பார்த்து முத்திரை குத்துகிற அபாயம் தொடர்ந்து நிலவி வருகிறது. இது என்போன்றவர்களுக்கு மிகுந்த சிக்கலைக் கொடுக்கிறது."*

2002க்குப் பிறகு சேரன் ஒரு நடுநிலமையாளர் என்பது மிகப்பெரிய பொய். லதாவும் வாசகர்களும் சேரனின் தீராநதிப் பேட்டியை வாசித்தால் சேரன் நடுநிலமையிலிருந்து விலகி அப்பட்டமான புலிச்சார்பு நிலை எடுப்பதை ஐயம்திரிபுற விளங்கிக்கொள்ளலாம். இப்போதைய திசைகள் பேட்டியிலும் அவரது புலிச்சார்பு அப்பட்டமாகத் தெரிந்தாலும்

இதில் தன்னை ஒரு நடுநிலமையாளராகக் காட்ட தனது craftiness இனால் முயன்று தோற்றுப்போகிறார்.

புலிகளுக்கு முதுகு தடவுகிற வேலைகளை இதில் செய்கிறார்.

(2) *"ஐரோப்பிய நாடுகளில் சில உருவாகியிருக்கும் ஈழத்துடன் பல விடயங்கள் குறித்தும் எவ்வாறு ஒப்பந்தம் செய்து கொள்ளலாம் என்பதற்கு இப்போதே தயாராக உள்ளன"* - சேரன்.

சேரன் மேற்கூறியவாறு கூறி ஆறு மாதங்கள் கழிவதற்கிடையில் ஐரோப்பிய ஒன்றியமே பாசிசப் புலிகளைத்தடை செய்துவிட்டது.

(3) *"விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரையில் போர் நிறுத்தம் நடை முறையில் இருந்து வருகிற இந்த மூன்று ஆண்டுகளில் அமைப்பு ரீதியாக பெருமளவு மாற்றங்களைச் சந்தித்திருக்கிறார்கள். இதுவரை காலமும் போராடுகிற ஓர் இயக்கமாக வளர்ச்சி பெற்றிருந்த அவர்கள் கடந்த ஆண்டுகளில் பெருமளவுக்கு சட்டரீதியாக அங்கீகாரம் பெறாத ஓர் அரசாகவே மாறிவிட்டார்கள். அவர்களுக்கென்று தனியாக ஆட்சிப்பிரதேசங்கள் இருக்கின்றன. காவல் துறை, விமானப்படை, கடல் படை போன்றவற்றை உருவாக்கி வைத்துள்ளார்கள். வன்னிப்பிரதேசத்தில் கிட்டத்தட்ட எல்லா வகையான அமைச்சுக்களையும் கொண்ட ஓர் அரசாங்கமே இயங்கி வருகிறது. அந்தப் பகுதியில் பெருமளவுக்கு வேலை வாய்ப்புக்க்களை வழங்குகிற ஒரு நிறுவனமாகவும் புலிகள் அமைப்பு விளங்குகிறது........" ஈழம் என்கிற நாடு இலங்கையின் வடக்கு கிழக்கில் ஏற்கனவே உருவாகியுள்ளது. ஆனால் அதற்கு சட்டரீதியான அங்கீகாரமும் அனைத்துலக ரீதியான அங்கீகாரமும் இன்னமும் கிடைக்கவில்லை"*
- சேரன்.

விடுதலைப் புலிகள் நீண்ட காலமாக ஒரே பகுதியை முழுமையாக தங்கள் கட்டுப் பாட்டுக்குள் வைத்திருக்கவில்லை. சுமார் 2 வருட காலம் யாழ் குடா நாட்டின் பகுதிகளை வைத்திருந்தார்கள் (1985 - 1987). பின்னர் 1990 இலிருந்து 1995 வரை 5 ஆண்டுகள் யாழ்குடாநாட்டின் பகுதிகளையும் வன்னிப் பகுதிகளையும் வைத்திருந்தார்கள். கிழக்கின் கிராமப் புறங்களில் சில சில பகுதிகளை இலங்கை இராணுவப் படை நகர்வு விலகல்களுக்கு ஏற்ப அவ்வப்போது வைத்திருந்தார்கள். ஆக சனத்தொகை மிகக் குறைவாகவும் நகரங்களும் அற்ற முக்கியத்துவம் அற்ற வன்னிப்புறக் காட்டுப் பகுதிகளைத்தான் ஏறத்தாழ 15 ஆண்டுகளாக வைத்திருக்கிறார்கள். இவைகளும் முழுமையான கட்டுப்பாடு அல்ல. விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலிருப்பதாகச் சொல்லப்படுகிற எல்லாப் பகுதிகளிலும் இலங்கையின் பொருளாதாரமே இயங்கியது. இயங்குகிறது. இதைவிட இப்பகுதிகளுள்ள கல்வி, மருத்துவம், சமூக நலன்பேணுகைகள், ஏறத்தாழ 60 வீதமான சட்டவாதிக்கம் (1985-1987 காலப் பகுதியிலும் யாழ் பல்கலைக்கழகத்தின் மற்றும் அனைத்து பாடசாலைகள் முதலியன மீதான சட்டவாதிக்கம், அவற்றின் நிர்வாகம் எல்லாம் இலங்கை அரசின் பூரண கட்டுப்பாட்டில்) இவை எல்லாமே இலங்கை அரசின் கட்டுபாடுக்குள்ளேயே இருந்தது. இருக்கிறது.

சேரன் கூறுகிற விடுதலைப் புலிகளின் அரசாங்கம் தாமரை இலைத்தண்ணீர் போல. அது மக்களுக்கானது அல்ல. புலி உறுப்பினர்களை பிரதிநிதித்துவப்படுத்துகிற அரசாங்கம். அது மக்களிடமிருந்து கடுமையான வரிகளை வாங்கும். ஆனால் அதற்கு பிரதி உபகாரமாக காவல்துறை, நீதித்துறை தவிர்ந்த வேறு எந்த சேவை பொருட்களையும் மக்களுக்கு வழங்காது. அதே சமயம் இலங்கை அரசாங்கம் மக்களுக்காக கொடுக்கிற சமூக நலக் கொடுப்பனவுகளின் குறிப்பிட்ட வீதத்தையும் திருடி எடுக்கும். விடுதலைப் புலிகளின் நீதித்துறை, காவல்துறை என்பன கூட "தேசியத் தலைவரின்" கண்காணிப்பில் கீழ் இயக்கப்படுகிறதே தவிர அவை கொள்கையளவில் கூட சுயாதீனமானவை அல்ல. 'இரவல் படையில் புரட்சி எதற்கு' என்று கவிதை எழுதிய சேரன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இரவல் பொருளாதாரத்தில் புலிகள் அரசாங்கம் நடத்தும்போது தமிழீழம் உருவாகிவிட்டது என்று கூறுவதைக் கேட்டு அழுவதா சிரிப்பதா?

சேரன் பிரேமதாசா அரசாங்கத்தினால் கடத்திச் செல்லப்பட்டு காணாமல் போன குகமூர்த்தியின் பெயரை மட்டும் குறிப்பிட்டு அவர் கடத்தப்பட்டதையும் மற்றும் அதற்குமுதல் ஒருமுறை அவர் கைது செய்யப் பட்டதையும் விலாவாரியாகச்சொல்லி அவரது நினைவு அடிக்கடி தன்னை கலவரப்படுத்துகிறது என்கிறார். வேறு சிலரை நண்பர்கள் என்று மட்டும் சாதுவாகச் சொல்லிவிட்டு நழுவுகிறார். உண்மையில் புலிகளால் கொல்லப்பட்ட தமிழர்களின் எண்ணிக்கை 20,000 ஐயும் தாண்டிக் கொண்டிருக்கிறது என்பது UTHR (page 424, Myths Decadence and Murder by Rajan Hoole) போன்ற நம்பகரமான மனித உரிமை அமைப்புக்களின் கணிப்பீடு (இவ்வெண்ணிக்கைக்கேட்டு அதிர்ச்சி அடையும் ஈழத் தமிழர்கள் முதலில் சில கணக்குகளை போட்டு பாருங்கள். கடந்த 30 ஆண்டுகளாக புலிகளால் கொல்லப்பட்ட உங்கள் உறவினர்களினதும், அயலவர்களினதும், நண்பர்களினதும் இவர்கள் தவிர்ந்த உங்கள் ஊரைச் சேர்ந்தவர்களினதும் எண்ணிக்கையை முதலில் கூட்டிப்பாருங்கள். இதே பேரதிர்ச்சியானதாக இருக்கும்)

சேரனின் தங்கையின் கணவரது சகோதரரையும் கொன்றது புலிகளே. யோகசுந்தரமும் தருமலிங்கமும் உட்பட சேரனின் நண்பர்கள் பெருமளவினரானவர் களையும் சேரனின் பதிப்பாளராகிய சபாலிங்கத் தையும் கொன்றது புலிகளே (இவற்றை தனது கவிதைத்தொகுதி முன்னுரையில் சேரன் உதிர்க்கிறார். சார்ந்ததன் வண்ணங்களுக்கேற்ப உதிர்ப்பார் அல்லது சுய தணிக்கை செய்வார்). செல்வி மற்றும் மனோகரன் முதலியோரும் சேரனின் நண்பர்களே. இவர்கள் இருவரையும் கடத்திச்சென்று சித்திரவதை செய்து கொன்றதும் புலிகளே. சேரன் கொழும்பில் வேலை செய்த ICES இன் முதல்வரும் வட அமெரிக்கப் பல்கலைகழகங்களில் தனக்கு இருக்கிற செல்வாக்கைப் பயன்படுத்தி சேரனுக்கு கலாநிதிப்பட்ட ஆய்வுக்கான புலமைப்பரிசிலைப் பெற்றுக் கொடுத்தவருமான நீலன் திருச்செல்வத்தையும் கொன்றது புலிகளே. இவர்களையெல்லாம் தவிர்த்து பிரேமதாசா அரசாங்கத்தின் முகவர்களால் கொல்லப்பட்ட குகமூர்த்தியின் பெயரை மட்டும் உதிர்ப்பதுதான் சேரனின் கீழ்த்தரமான சந்தர்ப்பவாத அரசியல்.

மூன்று தசாப்தங்களாக தொடரும் தமிழீழ விடுதலைப் புலிகளின் அடக்குமுறைகளால் தமிழ்பேசும் மக்களுக்கு இருந்த சாதகமான அம்சங்களும் இன்றைக்கு பாதகமாக மாற்றப்பட்டுள்ளன. 1987ம் ஆண்டு இலங்கை இந்திய ஒப்பந்தப்படிக்கு வடக்கு கிழக்கு இணைப்புக்கான தேர்தல் வடக்கு கிழக்கு மாகாணத்தில் நடத்தப்பட்டிருந்தால் வடக்கு மற்றும் கிழக்கிலுள்ள முஸ்லீம்களும் மற்றும் கிழக்கு மாகாணத் தமிழர்களும் இணைப்புக்கு ஆதரவாக வாக்களித்து இணைப்பு சாத்தியமாகியிருக்கும். ஆனால் இன்றைக்கு புலிகளின் முஸ்லீம்கள் தொடர்பான இனவாத மற்றும் இனஅழிப்புக் கொள்கை காரணமாகவும் கருணா பிரச்சனையை புலிகள் கையாண்ட விதத்தினாலும் முஸ்லீம்களும் கிழக்குத் தமிழர்களும் இணைப்புக்கு ஆதரவாக வாக்களிக்கமாட்டார்கள்.

> சிங்களவர்களிடமிருந்து மாநில சுயாட்சிக்குமேலாக தமிழீழம் கேட்டுப் போராடுகிற பிரபாகரன் குறைந்த பட்சம் கிழக்குக்கும் விடுதலைப் புலிகளுக்குள்ளும் அதிகாரப் பரவலாக்கம் கேட்ட கருணாவை அடக்க விழைந்ததோடு இன்னொரு தேசிய இனமான முஸ்லீம்களையும் கோரமாக அடக்குகிறார்.

இருபத்தோராம் நூற்றாண்டின் உலக ஒழுங்கின்படி குறைந்தது அடுத்த ஐம்பது ஆண்டுகளுக்கு தமிழீழம் உருவாகுவது சாத்தியமில்லை. இலங்கைத் தீவில் சிறுபான்மை இனமக்கள் அடக்கப்பட்ட அடக்கப்படுகிற பிரச்சனைக்கும் தமிழீழம் தீர்வல்ல. ஏனெனில் இலங்கைத்தீவின் 18 வீதமான தமிழர்களின் சனத்தொகையில் 33 வீதமான இந்திய வம்சாவளித் தமிழர்கள் உத்தேச தமிழீழத்துக்கு வெளியேதான் வசிக்கிறார்கள். உத்தேச தமிழீழத்தின் 17 வீதமான முஸ்லீம்களுக்கு விடுதலைப் புலிகளின் தமிழீழத்தில் இடமில்லை. எவ்வாறு இலங்கையின் சனத்தொகையில் 25 வீதமானவர்கள் தமிழ் முஸ்லிம் சிறுபான்மையினராக இருக்கிறார்களோ அவ்வாறே உத்தேச தமிழீழத்தின் சனத்தொகையில் 25 இலிருந்து 30 வரையான வீதம் முஸ்லிம் சிங்கள சிறுபான்மையினராக இருக்கிறார்கள். விடுதலைப் புலிகளின் தமிழீழத்தின் முஸ்லிம் சிங்கள சிறுபான்மையினர் அடக்கி ஒடுக்கப்படப்போவது உறுதி. எனவே தமிழீழம் பிரச்சனைக்கான தீர்வன்றி இன்னொரு பிரச்சனைக்கான ஆரம்பம்.

முறைகேடான அறமற்ற பாலியல் fantasy களையும் நனவாக்க ஒரு பொம்பிளைக் கள்ளனால் (Womaniser) முடியும். ஆனால் இங்கு சேரன் விளங்க வேண்டியது என்னவென்றால் தமிழீழம் ஒரு பாலியல் fantasy அல்ல. அது ஒரு அரசியல் fantasy.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# வோல்தம்ஸரோ கற்பக விநாயகர் ஆலயம்

**2 - 4 Bedford Rd, Walthamstow, London, E17 4PX**

## காயத்திரி அம்மன் வழிபாடு

ஆலயத்தில் மாதம் ஒரு
காயத்திரி யாக வழிபாடு
ஞாயிற்று கிழமைகளில் பின்வரும் திகதிளில் நடைபெறும்:

**மே 13, யூன் 10, யூலை 08, செப்ரம்பர் 30, ஒக்ரோபர் 07,**
**நவம்பர் 04, டிசம்பர் 30**

காலை 10 மணிக்கு விசேட அபிஷேகத்தைத் தொடர்ந்து விசேட பூசை
108 காயத்திரி ஜப சமர்ப்பணம், திருவீதியுலா.

**சந்தான கிருஷ்ணர் நுதன பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேகம்**
**மே 25, 2007 ஞாயிறு காலை 8 மணி முதல் மதியம் வரை**

---

அன்பார்ந்த தமிழ் மக்களே!

அண்மைக் காலங்களில் கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்ற மண் ஆக்கிரமிப்பு யுத்தத்தில் சுமார் 150,000 தமிழ் மக்கள் இடம்பெயர்ந்து பாடசாலைகளிலும் பொது மண்டபங்களிலும் போதிய உணவு சுகாதார மருத்துவ வசதிகளின்றி, அரசசார்பற்ற நிறுவனங்களின் போதிய உதவியின்றி நிர்க்கதியாகி உள்ளனர்.

இந்நிலையறிந்து எமது ஆலயம் உடனடி நிவாரண உதவி செய்வதற்கு 10,000 பவுண்கள் சேகரித்து மட்டக்களப்பு ஆயர் வணக்கத்திற்குரிய கிங்ஸ்லி சுவாமிப்பிள்ளை அவர்களுடாக அனுப்ப முடிவு செய்துள்ளது. மக்கள் பணியே மகேசன் பணி என்ற தத்துவத்திற்கிணங்க உடனடியாக எம் பணிக்கு தங்கள் உதவிக் கரங்களை நீட்டுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

தொடர்பு களுக்கு:
07956 919 511, 07961 158 453
2 - 4 Bedford Road,
Walthamstow, London E174PX

**Tel : 020 8527 3819**




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ச வேலு

# உற்பத்தி முறையியலின் அரசியல்




(பார்க்க: இதழ் 30, உற்பத்தி அரசியல்)

## மரணத்தின் வாயிலை திறந்து விட்டுள்ளது BT பருத்தி விதைகள்

*" பருத்தியை உற்பத்தி செய்வதில் இந்தியாவுக்கு அதிக ஆதாயம் உண்டு. ஏற்றுமதிக்கான வாய்ப்புக்கள் பருத்தியில் அதிகம் உள்ளன. தேவையானது என்னவென்றால் பருத்தி சர்வதேசச் சந்தையின் சக்திகளுக்கு திறந்துவிடப்பட வேண்டும். "*

World Bank – India, 1999. Country Economic Memorandum Vol 11 p.3 (Emphasis added)

உலகவங்கி இந்திய விவசாயம் பற்றி விதந்துரைத்த சீர்திருத்தங்களில் ஒன்று, விவசாயிகள் தங்கள் சொந்தப் பயன்பாட்டுக்கோ அல்லது இந்தியாவுக்குள் பயன்படுத்தப்படுவதற்கோ விளைவிக்கும் பொருட்களுக்குப் பதிலாக ஏற்றுமதிக்கான வியாபாரத்துக்கான விளைபொருள் உற்பத்தியில் ஈடுபட வேண்டும் என்பதாகும்.

உணவுப்பொருள் அல்லாத விளைபயிர் பயிரிடும் (பருத்தி பயிரிடும்) நிலப்பரபளவு அதிகரித்துள்ளது. இந்த மாற்றம் ஒரு கட்டாயப் படுத்தப்பட்ட வணிகரீதியான மாற்றமாகும். துண்டு துக்காணி நிலத்தை வைத்துக்கொண்டு வாய்க்கும் கைக்கும் போராடும் சிறுநில விவசாயிகள், கந்து வட்டிக்காரர்களையும் வியாபாரிகளையும் தான் கடன் வாங்க நம்பி இருக்கிறார்கள். தாங்கள் வாங்கிய கடனை மீளச் செலுத்த முடியாத விவசாயிகள் கடன்காரர்களால் துரத்தப்பட்டு மீண்டும் மீண்டும் அதே பயிரைப் பயிரிடுவதால் இந்தத் தேக்க நிலை மேலும் மோசமடைகின்றது.

விளைவுகள் இப்படி செங்குத்தாக வீழ்ந்த போதிலும்கூட விவசாயிகள் பயிர்த் தொழிலில் தொடர்ந்து ஈடுபடுகிறார்களென்றால், விவசாயிகளுக்கு விவசாயத்தைவிட்டால் வேறு வேலைவாய்ப்பு இல்லை என்பதே உண்மையாகும். குறிப்பாகச் சொல்லப்போனால், கடனுக்கு ஈடாக நிலத்தை அடமானம் வைப்பதும், திரும்பச் செலுத்த முடியாவிட்டால் நிலத்தை வட்டிக்காரர்கள் கையகப்படுத்தும் சூழலை உருவாக்கியது. ஆந்திர மாநில அரசு மகைகோ, மான்சாண்டோ நிறுவனத்தின் BT (BT- Bacillus Thuningiensis) விதைகளுக்குத் தடைவிதித்துள்ளது. விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள இழப்பை ஈடுகட்ட 63,000 கோடி ருபாவை மகைகோ, மான்சாண்டோ நிறுவனத்திடம் இழப்பீட்டுத் தொகையாகக் கேட்டுள்ளது.

மான்சாண்டோ நிறுவனத்தின் அதிகாரிகளோ "விதையை விற்பது மட்டுமே எமது வேலை. இதனால் சுற்றுச் சூழலுக்கோ, விவசாயிகளுக்கோ ஏற்படும் பாதிப்புகளை கண்காணிக்க வேண்டியது அரச அதிகாரிகளின் பொறுப்பு என்று தெளிவாகக் கூறியுள்ளனர்.

மராட்டிய மாநிலத்தில் விதர்பா பகுதியில் மான்சாண்டோ நிறுவனத்தின் BT பருத்தியின் தோல்வியால் கடன்சுமை தாங்காமல் ஆயிரத்துக்கும் மேற்பட்ட விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டனர். இது அந்த மாநிலத்தை மட்டுமல்ல இந்தியாவின் மற்றப் பகுதிகளுக்கும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

உடனடியாக கடந்த ஜுலை மாதம் முற்பகுதியில் விதர்ப்பாவின் பருத்திவிளையும் பகுதிகளில் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் சுற்றுப்பயணங்கள் மேற்கொண்டு நிவாரண உதவிகளை அறிவித்துவிட்டுச்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சென்றார். 35 விவசாயிகளை மட்டும் சந்தித்துவிட்டுச் சென்ற பின்பும் விவசாயிகளின் தற்கொலை தொடர்ந்து கொண்டே உள்ளது.

இவர் அறிவித்த 3,750 கோடி நிவாரண உதவியில் 2,177 கோடி 82 பெரிய நிர்ப்பாசனங்களுக்கும் 442 சிறிய நிர்ப்பாசனங்களுக்கும் செலவிடப்படும். இதனால் வெறும் 3 சதவீத நிலத்திற்கு மட்டுமே நீர்ப்பாசனத்தை விரிவுபடுத்த முடியும் என்பதே யதார்த்தமாகும். மகாராஷ்டிரா நீர்வள ஒழுங்குமுறை ஆணையச் சட்டம் 2005 விவசாயிகளை சொட்டு நீர்ப்பாசனத்திற்கு நிர்ப்பந்திக்கிறது. பாசனச் செலவையும் அவ்வரசு உயர்த்தியுள்ளது.

மேலும் மீதமுள்ள நிவாரண நிதியில் 180 கோடி ரூபா விதை மாற்றுக்கானது. இந்தப் பணமும் மன்சாண்டோ நிறுவனத்திற்கு மறைமுகமாக வழங்கப்பட்ட பரிசாகும். வங்கிக் கடன்களின் மீதும் 712 கோடி ரூபாய்க்கான வட்டி தள்ளுபடியை மட்டுமே இந்த நிவாரண உதவி வழங்குகின்றது.

கடுமையாக வீழ்ச்சியடைந்த பருத்தியின் விலை உயர்வைப்பற்றி ஒரு வார்த்தையும் குறிப்பிடப்படவில்லை. அனைத்துப் பொருட்களின் விலைகளும் ஏறிக்கொண்டிருக்கும் பொழுது பருத்தியின் விலையை அரசு குறைத்தது தற்கொலைக்கு முதன்மையான காரணமாக விளங்குகின்றது.

மேலும் வெறும் 25,000 ரூபாய்க்கும் குறைவான கடன்கள் 80 விழுக்காடு இருக்கும் நிலையில், அந்த உண்மையான வங்கிக் கடன்களை தள்ளுபடி செய்ய எந்தவொரு அறிவிப்பும் வெளியிடப்படவில்லை. 60 விழுக்காடு நிலம் BT வகைப் பருத்தியைப் பயன்படுத்தும் முறைக்கு மாறிய பிறகு பூச்சி மருந்துகளைப் பயன்படுத்துவது அதிகரித்துள்ளது.

இப்பகுதியில் தற்கொலை செய்து கொண்ட விவசாயி சாஹிப்ராவ் தனது தற்கொலைக் குறிப்பில்,

*"இங்கு அடமானம் என்று ஒன்றுமே இல்லை. உங்கள் நிலத்தை விற்பதற்கான பத்திரத்தைக் கந்து வட்டிக்காரரிடம் கொடுத்தவிட்டால் போதும். ஏட்டளவில் நீங்கள் உங்கள் கடனைத் திருப்பிச் செலுத்தினாலும், உங்கள் நிலம் அவருடைய கைகளில்தான் இருக்கும். உண்மையில் அவர் மேலும் பணத்தைக் கேட்கிறார்."*

கடந்த ஈராண்டு முதல் இதுவரை விதர்பா பகுதியில் ஏறத்தாழ 1,000 விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டார்கள். மன்மோகன் சிங் சுற்றுப்பயணத்திற்குப் பிறகு (ஜுலை 1 முதல் ஒகஸ்ட் 3 வரை) 49 நாட்களில் 101 விவசாயிகள் தற்கொலை செய்துகொண்டனர். ஒவ்வொரு எட்டு மணி நேரத்திற்கும் ஒரு தற்கொலை. இவை அனைத்தும் குறைவாக மதிப்பிடப்பட்ட அதிகாரபூர்வ அரசாங்க புள்ளிவிபரங்கள்.

இத்தற்கொலை நிகழ்வுகள் சர்வசாதாரணமானவை என அரசியல் அமைப்பினால் உள்வாங்கப்படுகின்றது. ஆள்பவர்கள் இதனை வெட்கமின்றி அலட்சியப்படுத்துவதும் சகஜமாகி விட்டது. ஆயிரக்கணக்கான சாவுகள் நிகழ்ந்துவிட்ட போதிலும் கூட மகாராஷ்டிரா அரசு ஆட்சியில் நீடிக்கிறது. இதுதான் இந்தியப் பாராளுமன்ற ஜனநாயகத்தின் லட்சணமாக இருக்கின்றது.

இன்று இந்தியாவின் இதயப் பகுதிகள் பன்னாட்டு நிறுவனங்களுக்கு சிறப்பு பொருளாதார மண்டலங்களை அமைத்துத் தாரைவார்ப்பதுடன் அதன் உள்கட்டமைப்புக்கு கோடிக்கணக்கில் பணத்தையும் வாரி இறைக்கின்றன.

## அமெரிக்காவின் பொருளாதார தேக்கமும் சர்வதேசத்தின் மீது அதன் அடாவடித்தனமும்

*"செப்டெம்பர் 11 சம்பவத்துக்கு முன்னதாகவே, பொருளாதாரத் தேக்கநிலை என அதிகாரபூர்வமாக அழைக்கப்படும் ஒரு மந்த நிலைக்குள் அமெரிக்க பொருளாதாரம் நுழைந்துவிட்டது என்பதுடன் அந்நிலையே இன்றும் நீடித்துக் கொண்டிருக்கிறது. அமெரிக்காவின் உற்பத்தித்துறைக்கு 1982க்குப் பிறகு மிக மோசமான ஆண்டு 2001 என்று சொல்ல முடியும். தொழில் உற்பத்தி 3.9வீதம் வீழ்ச்சியடைந்து உள்ளது."*

(Global Economics and Developing Countries 2002. GEF 2002 – World Bank, October 2001)

தீவிரமாகும் பொருளாதார மோதல்களின் விளைவாக, உலக வர்த்தகக் கழகத்தின் ( World Trade Organization - WTO) வர்த்தக பேச்சுவார்த்தைகள் முறிந்த நிலையில் உள்ளன. கடந்த ஜுன் மாதத்தில் ஜெனீவாவில் நடைபெற்ற குறுகிய அளவிலான அமைச்சர்கள் மட்டக் கூட்டம் அதிகரித்து வந்த மோதல்களுக்கிடையில் திடீரென நிறுத்தப்பட்டது. விவசாய மானியங்கள் குறித்த கேள்வியில் தான் முக்கியமான மோதல்கள் நிலவுகின்றன. விவாதிப்பதற்காக வரையப்பட்டுள்ள வரைவுத் திட்டத்தில் 760 கருத்து வேறுபாடுகள் உள்ளன. அமெரிக்காவின் மூர்க்கமான நிலைப்பாடும் வரட்டுப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




பிடிவாதமும்தான் பேச்சவார்த்தை முறிவதற்கு முக்கிய காரணம்.

அமெரிக்கா விவசாய மானியங்களைக் குறைக்க மறுத்ததோடு, 3 பில்லியன் டாலர்கள் அளவுக்கு மானியனியங்களை உயர்த்தும் முடிவையும் முன் வைத்தது. அதே நேரத்தில், அது ஐரோப்பிய ஒன்றியத்தையும், வளர்ச்சியடையாத நாடுகளையும் விவசாயப் பொருட்கள், உற்பத்திப் பொருட்கள் மற்றும் சேவைகள் ஆகியவற்றின் மீதான இறக்குமதிவரியை 90 விழுக்காடு வரை வெட்ட வேண்டும் என்று நிர்ப்பந்தித்தது. மேலும், தங்களது விவசாயிகளுக்கும், தொழில் உற்பத்தியாளர்களுக்கும் சேவைத்துறையைச் சார்ந்தவர்களுக்கும் சந்தையை முற்றிலுமாகத் திறந்துவிட வேண்டும் என்று கோரியது. பிரேசிலும் இந்தியாவும் பிடிவாதமாக இருப்பதாகவும், ஐரோப்பிய ஒன்றியம் விவசாயச் சந்தைகளைத் திறந்துவிடுவதற்கு மறுத்து வருவதாகவும் அது குற்றம் சாட்டியது.

அமெரிக்காவின் விரைவு தட ஆணையம் வர்த்தக உடன்படிக்கைகளை அவை 2007ம் ஆண்டு மத்தியில் காலாவதியாவதற்கு முன்பாக நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட வேண்டிய அவசியம் இருப்பதால்தான் ஒருமித்த கருத்தை விரைவாக உருவாக்க அது காட்டும் அவசரத்திற்கு ஒரு முக்கிய காரணமாக இருக்கிறது. அதற்குள் ஒருமித்த கருத்து ஏற்படாவிட்டால் உலக வர்த்தக கழகம் நிலைத்திருப்பது சந்தேகம்தான்.

அண்மையில் வெளியிடப்பட்ட கோல்ட்மேன் சாக் உடைய அறிக்கை, உலக பொருளாதாரத்தின் நிலைமைகளும், குறிப்பாக அமெரிக்க பொருளாதாரமும் (வர்த்தகப் பற்றாக்குறையும் நிதிப் பற்றாக்குறையும்) மோசமடைந்து வருவதாகக் கூறுகின்றது. அமெரிக்காவின் வர்த்தகப் பற்றாக்குறை இருமடங்காக அதிகரித்திருக்கிறது. அமெரிக்கா எடுக்கின்ற மூர்க்கத்தனமான நிலைப்பாட்டிற்கு இதுவே முக்கிய காரணங்களாக இருக்கின்றன.

வளர்ச்சியடையாத நாடுகளுடன் செய்துகொண்ட சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களில் அது தொழிலாளர் தரம், சுற்றுச்சூழல் தரம், தங்குதடையற்ற மூலதனப் பாய்ச்சல் முதலிய உலக வர்த்தக கழகத்தின் கீழ் நடக்கும் பேச்சுவார்த்தைகளில் சாத்தியமில்லாத நிபந்தனைகளை விதித்துள்ளது.

அனைத்து சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களிலும் அமெரிக்காவிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட துணிகளைக்கொண்டு உருவாக்கப்படும் பின்னலாடைகளின் இறக்குமதிக்கு மட்டுமதான் அமெரிக்கா வரிவிலக்கை அளிக்கிறது. மேலும் அமெரிக்கா தனது பாதுகாப்புவாதக் கொள்கைகளை தொடர்கின்ற நோக்கில் உலக வர்த்தக கழகத்தின் விதிகளை மீறுகின்ற மசோதாக்களை தாக்கல் செய்துள்ளது. சீனா, தனது செலாவணியை மறுமதிப்பீடு செய்யத் தவறினால், சீனப்பொருட்களின்மீது 27வீத இறக்குமதி வரியை விதிப்பது குறித்து அண்மையில் ஒரு மசோதா தாக்கல் செய்யப்பட்டது. பிற பொருளாதார வல்லரசுகளுடனும் மோதல் தீவிரமடைகிறது.

தற்போது முக்கியமான போட்டியாளராக இருப்பது ஐரோப்பிய ஒன்றியம் மட்டுமல்ல. ஷங்காய் நட்புறவுக் கழகம் (Shanghai Co-Operative Organisation) போன்ற வர்த்தக மோதலின் பிற மையங்களும் வளர்ந்து கொண்டிருக்கின்றன. ஷங்காய் நட்புறவுக் கழகம் அவர்களுடைய பகுதியில் அமெரிக்காவின் ஆதிக்கத்தை நிர்மூலமாக்கும் சக்தியாக உருவெடுத்துக் கொண்டிருக்கின்றது.

உலகத்தின் எண்ணெய் எரிவாயு வளங்களின் பெரும்பகுதியை ஷங்காய் நட்புறவுக் கழகம் தனது கட்டுப்பாட்டில் வைத்துள்ளது. ஏற்கெனவே 125 கூட்டுத் திட்டங்களுக்கு இசைவு தெரிவித்து, சுரங்கம், போக்குவரத்து முதலீட்டு ஊக்குவிப்பு, தொலைத் தொடர்புத்துறை மற்றும் ஆற்றல்சக்தி ஆகிய துறைகளில் ஒருங்கிணைப்பை ஏற்படுத்த ஏழு குழுக்களை உருவாக்கியிருக்கிறார்கள். ரஷ்யாவிற்கும் சீனாவுக்கும் இடையில் இருதரப்பு வர்த்தகத்தின் விளைவாக 2005ஆம் ஆண்டில் 30 பில்லியன் டாலர்களை ஈட்டியுள்ளது.

அமெரிக்கா தனக்கான சந்தையை தேடிக் கொண்டிருப்பதிலும், தனக்கென்று சொந்தமாக சந்தைகளை கைப்பற்றுவதற்கும் அது தனது பலத்தை இராணுவபலம் அல்லது வேறுவகைப்பட்ட



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என் செல்வராஜா

# நினைவில் அணையாத தீ

"அன்று இரவு 10 மணி போல நூலகத்திற்குள் நுழைந்த கொடியவர்கள் காவலாளியைத் துரத்தியடித்து விட்டு நூலகப் பெருங்கதவைக் கொத்தித் திறந்து உள்ளே புகுந்து அட்டூழியங்கள் புரிந்தனர். 97ஆயிரம் கிடைத்தற்கரிய நூல்கள் மற்றும் ஓலைச்சுவடிகளுக்குப் பெற்றோல் ஊற்றிக் கொழுத்தி எரித்தழித்தனர். நூலகத்தினுள் சாம்பல் குவியல்களே எஞ்சிக் கிடந்தன. அந்தச் சாம்பல் குவியல்களுக்குள்ளே எரியாத நூல்கள் ஏதேனும் எஞ்சிக் கிடக்குமோ என்ற நப்பாசையில் நூலக உதவியாளர்கள் சு.யோ.இமானுவேலும் அ.டொன் பொஸ்கோவும் ச.கந்தையாவும் சாம்பல் குவியல்களைக் கிளறிக் கொண்டிருந்த நிலையைக் காண முடிந்தது. நூலகம் கருகிக் காரை பெயர்ந்து கிடந்தது ... கயவர்கள் நூலகத்தையே புகைத்து விட்டார்கள்." என்று நீலவண்ணன் எழுதிய "மீண்டும் யாழ்ப்பாணம் எரிகின்றது" என்ற சிறுநூல் யாழ் நூலகப் படுகொலை பற்றிக் குறிப்பிடுகின்றது.

ஈழத்தமிழர்களின் பெரும் செல்வமாக விளங்கிய யாழ்ப்பாணப் பொது நூலகம் எரியூட்டிச் சிதைக்கப்பட்டு இருபத்தியாறு ஆண்டுகள் நிறைவு பெற்றுவிட்டன. 1981ஆம் ஆண்டு மே மாதம் 31ஆம் திகதி நள்ளிரவு 12 மணிக்குப் பின்னர் இந்த அறிவுக்களஞ்சியம் காடையர்களினால் நெருப்பிடப்பட்டு நீறாகிப் போய்விட்டது. அந்த நெஞ்சைப் பிளக்கும் செய்தியைக் கேட்ட மாத்திரத்தில் மாரடைப்பு ஏற்பட்டு மாணமானார் பேரறிஞனும் ஆராய்ச்சியாளனுமாகிய வண. டேவிட் அடிகள்.

1894-ம் ஆண்டு சிலோன் ஒப்சேவர் பத்திரிகையில் யாழ். பொதுநூலகம் பற்றிய குறிப்பை முதலிலே வைத்திருக்கின்றார் ஆசிரியர். யாழ்ப்பாணத்தில் பணியாற்றிய பிரிட்டிஷ் அதிகாரிகளும், யாழ்ப்பாணத்து அறிஞர்களும் சேர்ந்து இந்த நூலகத்தை அமைக்க முற்பட்டதனை சிலோன் ஒப்சேர்வர் குறிப்பிடுகின்றது. இக்குறிப்பிலே அரசாங்கத்திடமிருந்து மேலும் 50 ரூபா மானியமாகப் பெறப்பட வேண்டும் என்ற பிரேரணை கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டது என்ற செய்தி காணப்படுகின்றது. 1954-ம் ஆண்டு புதிய நூலகத்திற்கு அத்திவாரக்கல் நாட்டப்பட்ட செய்தியை தினகரன் வெளியிட்டுள்ளது. இதற்குப் பின்னர் எரியூட்டலும் அதனைப்பற்றிய செய்திகளும் காணப்படுகின்றன.

அனேகமாக 1981 மே மாதம் 31-ம் திகதி நள்ளிரவு 12 மணிக்குப் பின்னர் வெளியான 1981-ம் ஆண்டு நாழிதழ்கள், வார இதழ்கள் யாவுமே (உலகம் முழுவதும்) யாழ்ப்பாண பொது நூலகத்தின் 'படுகொலை'யைப் பற்றி விலாவாரியாக எழுதியிருந்தன. பேரறிஞர் அண்ணா அமெரிக்க யேல் பல்கலைக்கழக வரலாற்றுத்துறை மண்டபத்தின்வாயில் முகப்பிலே கண்டு சொன்ன மகுடவாசகம் இது.

"வரலாற்றிடமிருந்து யாரும் பாடம் படிப்பதே இல்லை."

பலத்தைக் காட்டுவதில் வியப்பேதுமில்லை.

இந்த நிகழ்ச்சியின் போக்கில் உலக வர்த்தகக் கழகம் தடைக்கல்லாக விளங்கினால் அதை அமைதியாகப் புதைத்துவிடலாம். ஆனால் அதிகரித்து க்கொண்டிருக்கின்ற வட்டார வர்த்தக குழுமங்களால் உலக வர்த்தகக் கழகம் மறைந்துவிடாது என்றாலும் தனது முக்கியத்துவத்தை இழந்துதான் தீரவேண்டும்.

வளர்ந்துவரும் இந்தப் போக்கை அமெரிக்காவை வைத்து மட்டுமல்ல, ஐரோப்பிய ஒன்றியம், ரஷ்யா, மற்றும் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு ஜப்பானை வைத்தும்கூட காணமுடியும். சோஷலிசத்தின் வீழ்ச்சி, பனிப்போரின் முடிவு ஆகியவற்றிற்குப் பிந்திய காலகட்டத்தில் வல்லரசுகளுக்கு பின்தங்கிய நாடுகளின் சந்தைகளை இதுவரை கண்டிராத அளவுக்கு உடைத்துத் திறக்கவேண்டிய தேவை இருந்ததால் தான் நிதி மூலதனத்தைக்கொண்டு ஒரு கூட்டுத் தாக்குதலை மேற்கொள்ள அவர்களுக்கு உலக வர்த்தக கழகம் தேவைப்பட்டது.

உலகமயமாக்கல் என்ற பெயரில் அவர்கள் இக்குறிக்கோளை சாதித்தனர். பொருளாதார நெருக்கடி தீவிரமடைந்து வருவதன் விளைவாக குறைந்தபட்சம் வர்த்தகத்துறையில் மோதல் வலுக்கின்றது. இனி உலக வர்த்தக கழகம் ஒட்டுமொத்தமாக பயனற்ற அமைப்பாக மாறிவிடும் ஒரு சூழலை அமெரிக்காவின் இன்றைய செயற்பாடு காட்டுகின்றது.

பயன்படுத்தப்பட்ட நூல்கள்:

1. புதுக்காலனிய சுரண்டலின் புது வடிவம் - வான்முகில் (புனைபெயரில் எழுதிவரும் கல்பாக்க அணுஉலை விஞ்ஞானி). த.க.பொ.மலர் 2006.
2. People's March, September 2006
3. இந்திய விவசாயிகளும் கடன்சுமையும். புதுவை ஞானம்.
4. Aspects of India's Economy – 32/ January 2002.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ரி கொன்ஸ்ரன்ரைன்

# கதை சொல்கிறார் அமைச்சர் டக்ளஸ்



லண்டனுக்கு விஜயமொன்றை மேற்கொண்டிருந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை ஏப்ரல் 4ல் சந்தித்த போது சுவாரஷ் யமாக உவமானக் கதை ஒன்றைக் கூறினார். ஒரு இனிப்பு மிட்டாய் வியாபாரி கடற்கரையில் தனது வண்டியை தள்ளி வியாபாரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தானாம். அப்போது வியாபாரியின் சைக்கிள் சில்லு மணலினுள் புதைபடவே அருகில் நின்ற சிறுவனை உதவிக்கு அழைத்தானாம். அந்த சைக்கிளை மணலில் இருந்து எடுத்து விட்டால் இனிப்பு மிட்டாய் தருவதாக ஒத்துக் கொண்டானாம் அந்த வியாபாரி. துடியாட்டமான சிறுவனின் உதவியால் மணலினுள் இருந்து சைக்கிள் எடுக்கப்பட்டது. பதிலாக வியாபாரி சிறிய உருண்டை மிட்டாய் செய்து பையனின் கையில் கொடுக்க பையனுக்கு வந்ததாம் கோபம். தனக்கு பெரிய மிட்டாய் செய்துதர வேண்டும் என்று அடம்பிடித்தானாம். சிறிதளவு பெரிதாகச் செய்து கொடுத்தானாம் வியாபாரி. சிறுவனோ திருப்திப்படுவதாக இல்லை. கடைசியில் கடற்கரையில் படுத்துக்கிடந்த நோர்வே உல்லாசப் பயணியான ஒரு வெள்ளையரை அழைத்து விலக்குத் தீர்க்கும்படி கூறினானாம் சிறுவன். அவரும் என்ன பிரச்சனை என்று விசாரித்து சின்னதாகவும் பெரிதாகவும் இரண்டு மிட்டாய்களைச் செய்து இதிலொன்றை எடுக்கச் சொன்னாராம். அந்தச் சிறுவனும் அதில் பெரிதானதை எடுத்துக் கொண்டு இடத்தைக் காலி பண்ணினானாம்.

எல்லோரும் போன பிறகு இந்த மிட்டாய் வியாபாரி சொன்னானாம் "அடபடுபாவியே இந்த வெள்ளையன் கொடுத்ததை விட அதிகமாக கொடுக்க அல்லவா நான் நினைத்திருந்தேன்" என்று பெருமூச்சு விட்டானாம். தனித்தமிழ் ஈழம் கேட்ட மக்கள் இன்று நான்கு பக்கமாக சிதறி ஓட ஏற்கனவே இருந்த வடக்கு கிழக்கு மாகாண இணைப்பும் ரத்துச் செய்யப்பட்டு இன்றைய தமிழ் மக்களின் அரசியல் நிலை இருந்ததைவிட மோசமாக இருக்கின்றது என்பதே டக்ளசின் கருத்து. எனவே ஆக மொத்தமாக சிங்கள அரசு கொடுக்கும் உரிமையைப் பெற்றுக் கொண்டு பின்னர் தமிழரின் அரசியல் போராட்டத்தை கட்டம் கட்டமாக எடுத்துச் செல்வதே இன்றைய காலகட்டத்தில் புத்தியான செயல் என்பதையே டக்ளஸின் இக் கதைக்கான விளக்கம்.

இன்று ஈபிடிபி, விடுதலைக் கூட்டணி போன்ற கட்சிகளுக்கு அரசின் ஆதரவு கட்டாயம் வேண்டும். இல்லாவிடில் புலிகள் தம்மை அழித்து விடுவார்கள் என்று அவர் மேலும் கூறினார். இன்று ஈழத்தமிழ் அரசியலில் ஜனநாயகம் இருக்க வேண்டுமானால் தமிழ் ஜனநாயகக் கட்சிகள் அரசுடன் சேர்ந்தே பணியாற்ற வேண்டும் என்பது தான் யதார்த்தம். அல்லது புலி எதிர்ப்பு கட்சிகள் எல்லாம் ஒரே நாளில் அழிந்துவிடும் என்கிறார் டக்ளஸ். அதில் சந்தேகமே இல்லை.

நிலமைகளை கொஞ்சம் றிவைன் பண்ணிப் பார்ப்போம். 1984ம் ஆண்டு ........... இற்றைக்கு 23 வருடங்களுக்கு முன், முன்னாள் இந்தியப் பிரதமராக இருந்த இந்திராகாந்தி சுட்டுக் கொல்லப்பட்ட சமயம் பேட்டி ஒன்று எடுப்பதற்காக, அன்றைய எதிர்க்கட்சித் தலைவரும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளருமான காலம் சென்ற அமிர்தலிங்கம் அவர்களை அவரின் வட்டுக்கோட்டை மூளாய் வீட்டில் சந்தித்தேன். அவர் அப்போது தனது குடும்ப பட அல்பத்தை காட்டி அதில் இந்திராகாந்தி மற்றும் சக இந்திய அமைச்சர்களுடன் இருந்த படங்களை காட்டி ஈழ விடுதலையில் காந்தி குடும்பத்தின் அனுசரணையையும் அதிலும் குறிப்பாக ஈழத்தமிழ் மக்களுக்கு ஒரு ஸ்திரமான அரசியல் விடிவு வரவேண்டுமானால் அது இந்தியாவின் உத்தரவாதத்தின் அடிப்படையிலேயே நிகழ வேண்டும் என்றும் கூறினார். டக்ளஸ் இன்று கூறும் கட்டம் கட்டமாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உரிமைகளை வென்றெடுக்கும் அரசியலைத் தான் அமிர்தலிங்கம் அன்று பேசினார்.

அன்று அமிர்தலிங்கம், கூட்டணியினர் தமது பேச்சாலும் எழுத்தலும் இளைஞர்களைத் தூண்டினர். பல ஜனநாயக விரோத செயல்களைக் கண்டும் காணாமல் இருந்தனர். முன்னாள் யாழ் மேயர் துரையப்பாவின் கொலையைக் கண்டிக்கத் தவறினர். (துரையப்பாவின் கொலையைக் கண்டிக்கத் தவறியதையும் கொலையாளிகளுக்காக தமிழர் விடுதலைக் கூட்டணியின் அப்புக்காத்துமார் வழக்காடியதையும் தவறு என்று கூட்டணியின் இன்றைய தலைவர் ஆனந்தசங்கரி தேசத்திற்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்திருக்கிறார்.)

இன்று அரசுடன் சேர்ந்து ஈபிடிபி கட்சியினர் மனிதஉரிமை மீறல் சம்பவங்களை செய்கின்றனர். அடுத்த ஜனநாயகவாதியான கருணாவைப் பற்றி பேசவே வேண்டியதில்லை.

இதில் இன்னொரு விடயமும் இருக்கின்றது. அன்று தமிழர் விடுதலைக் கூட்டணி நூற்றுக்கு நூறுவீதமான ஆசனங்களையும் கைப்பற்றி ஒரு ஒற்றுமையான அரசியல் கட்சியாக விளங்கியது. ஆனால் இன்று ஈபிடிபி ஒரேயொரு பாராளுமன்ற உறுப்பினரைத் தான் கொண்டிருக்கிறது. ஈபிடிபி யை விட ஜனநாயக அரசியல் பேசும் மற்றைய கட்சிகளான ஈபிஆர்எல்எப் (நாபா அணி, வரதர் அணி, என்னுடைய கொன்ஸ் அணி, உங்களுக்கும் ஏதாவது அணி இருந்தால் உடன் அறியத் தரவும்), புளொட், ஈஎன்டிஎல்எப் எக்ஸற்றா எக்ஸற்றாக்களின் நிலைமையோ இன்னமும் கவலைக்கிடம்.

அன்று 30 வருடங்களுக்கு முன் கட்டம் கட்டமாக தமிழீழம் பெறுவோம் என அமிர்தலிங்கம் கூறும்போது எமக்கு கொசு மருந்தடிக்கவும், வெள்ளையடிக்கவும் மாவட்ட அபிவிருத்திசபை தேவையில்லை என்று குளறியடித்த ஈபிஆர்எல்எப் மற்றும் இயக்கங்கள் இப்போது அரசாங்கம் எதைத் தந்தாலும் வாங்கிக் கொள்வோம் என்ற நிலைக்கு வந்துவிட்டன.

இன்று ஜனநாயக வெள்ளோட்டத்தில் இணைந்துவிட்டதாகக் கூறும் தமிழ்க் கட்சிகள் ஒன்றை மனதில் வைத்துக் கொள்ள வேண்டும். தம்மை எதிர்ப்பவர்களை விடுதலைப் புலிகள் ஒரு போதும் விட்டு வைப்பதில்லை. இது உண்மைதான். ஆனால் அதற்காக ஈபிடிபி தலைவர் டக்ளஸ் தேவானந்தாவும், கூட்டணியின் தலைவர் ஆனந்தசங்கரியும் லண்டனில் சந்தித்துப் பேசியதும் அதே போல் ஈபிஆர்எல்எப், புளொட், தமிழர் விடுதலைக் கூட்டணியினரும் கூட்டறிக்கை வெளியிட்டு உள்ளதும் ஒன்றும் பெரிய சாதனையுமல்ல வரலாற்றுத் திருப்புமுனையுமல்ல.

21 வருடங்களுக்கு முன் விடுதலைப் புலிகள் ரெலோவை அழிக்கும் போது ஒன்றுபட்டு அதனை தடுக்க முடியாதவர்கள் இன்றைக்கு ஒன்றாக ரீ குடிப்பதை ஒற்றுமைக்கான அடித்தளம் என்கின்றனர். இதற்கு முன்னும் இவர்கள் இப்படி எத்தனை கூட்டை ஏற்படுத்தினார்கள். மக்களுடைய கஸ்ட நஸ்டங்களைப் புரிந்துகொண்டு ஏதாவது ஒரு குறைந்தபட்ச வேலைத் திட்டத்திலாவது இவர்கள் செயற்பட முன் வந்திருக்கிறார்களா என்றால் இல்லை. கட்சியில் இரண்டு பேர் என்றாலும் பரவாயில்லை நான் தலைவனாக இருக்க வேண்டும் என்பதற்கு மேல் இவர்களிடம் எந்த வேலைத்திட்டமுமில்லை.

எல்லோரும் சிறு சிறு கும்பலாக பல திக்குகளில் சிதறிக் கிடக்கின்றனர். இந்த புலி எதிர்ப்புக் குழுக்கள் எல்லாம் ஒரு அரசியல் ஜனநாயக சக்திகளாக இன்னமும் அணி திரளவில்லை. அது மட்டுமல்லாமல் புலி எதிர்ப்பைத் தவிர இவர்கள் வேறு எதையும் செய்வதாக தெரியவில்லை. அரச படைகளால் தொடர்ந்து நடத்தப்படும் தமிழ்பேசும் மக்கள் மீதான இராணுவ பலாத்காரங்களை எதிர்த்து என்ன நடவடிக்கை கூட்டாக எடுத்து இருக்கிறார்கள்? ஆக மொத்தமாக மௌனமாக இருப்பது தான் இவர்களின் ஜனநாயகத்தின் உச்ச கட்டம். அல்லது தமிழர்கள் பாதிக்கப்படுவது தவிர்க்க முடியாதது. அல்லது இவ்வாறான செயல்கள் தான் மக்களை புலிகளில் இருந்து அந்நியப்படுத்தும் என எண்ணி மௌனம் சாதிக்கிறார்களா? போரை எதிர்க்கும் சிங்கள முற்போக்கு சக்திகளுடனும் இடதுசாரிக் கட்சிகளுடனும் எவ்வித வேலைத் திட்டத்தை வைத்திருக்கிறார்கள்? புலி எதிர்ப்பு அரசியல் மட்டும் எவரையும் ஜனநாயக சக்திகளாக மாற்றிவிடாது. அரசியல் சதுரங்கத்தில் பகடைக் காய்களாக என்றுமேயுள்ள சாதாரண தமிழ் மக்களின் நலனிற்காக ஜனநாயகத்தில் இணைந்துள்ளதாக கூறும் கட்சிகள் என்ன போராட்டம் நடாத்தி உள்ளார்கள் ?

புலி எதிர்ப்பு கட்சிகள் புலி எதிர்ப்பு வாதத்தை மட்டும் தமது அரசியல் ஆயுதமாக பயன்படுத்தாமல் ஸ்ரீலங்கா அரசாங்கம் காலாகாலமாக தமிழ் பேசும் மக்கள் மீது புரிந்துவரும் அட்டூழியங்களை எதிர்க்க ஒரு அரசியல் சக்தியாக பரிணாமிக்காமல் இருக்கும் வரை விடுதலைப் புலிகள் தமிழ் பேசும் மக்களின் மாபெரும் ஏகோபித்த குரலாகவும் இதர சக்திகள் அரசின் தயவில் ஒரே ஒரு அரச நாற்காலிக்கு லொட்டரி அடிக்கும் குழுவாகவும் தான் இருந்துவிட்டுப் போக முடியும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சி அசோகன்

# தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் தோல்வியின் முதற்படி

இலங்கை சுதந்திரம் அடைந்த 1948ம் ஆண்டில் இருந்து தமது சுயநிர்ணய உரிமைக்காக ஜனநாயக வழிகளில் போராடி வந்த ஈழத்தமிழ் மக்கள் தமது ஜனநாயக உரிமைகள் சிங்கள அரசினால் மறுக்கப்பட்ட காரணத்தால் எழுபதுகளின் மத்தியில் ஆயுதம் ஏந்திப் போராடத் தொடங்கினர். 1983 ஜுலை இனப்படுகொலைகளைத் தொடர்ந்து இவ் ஆயுதப் போராட்டம் வீறுகொண்டு எழுந்தது. ஆயுதப் போராட்டத்தின் வளர்ச்சி பிரம்மிக்கத்தக்கதாயிருந்தது.

சிங்கள அரசின் நிர்வாக இயந்திரம் வடக்கு கிழக்குப் பகுதிகளில் செயல்பட முடியாது போயின. சிங்கள இராணுவம் முகாம்களுக்குள் தடுத்து வைக்கப்பட்டிருந்தன. இப்படிப்பட்ட வளர்ச்சிக்கு காரணம் ஈழ மக்களின் பரந்துபட்ட ஆதரவும் தமிழ் நாட்டு மக்களின் எழுச்சியும் இவ்வெழுச்சியின் விளைவாக இந்திய அரசு இப்பிரச்சனையில் தலையிட்டு ஈழப்போராளிகளுக்கு உதவியதுமே ஆகும்.

சிங்கள அரசுக்கு எதிரான ஆயுதப்போராட்டத்தில் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் (LTTE), தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (TELO), தமிழ் ஈழ மக்கள் விடுதலைக் கழகம் (PLOT), ஈழப்புரட்சி அமைப்பு (EROS), ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (EPRLF) ஆகிய 5 பிரதான போராளி அமைப்புக்கள் ஈடுபட்டு இருந்தன. இவை தவிர தமிழ் ஈழ விடுதலை இராணுவம் (TELA), தமிழ் ஈழ இராணுவம் (TEA) போன்ற சிறிய அமைப்புக்களும் இருந்தன. பல்வேறு வகைகளிலும் வளர்ச்சி அடைந்து வந்த ஈழப்போராட்டம் திடீர் என வீழ்ச்சியடையக் காரணம் என்ன? இதன் காரண கர்த்தாக்கள் யார்? இதற்கு துணை நின்ற சக்திகள் எவை? என்பன ஆராயப்பட வேண்டிய விடயங்கள் ஆகும்.

ஈழப்போராட்டம் தோல்வியுற்றமைக்கு முக்கிய காரணம் ஈழப்போராளிகளிடையே ஒற்றுமையின்மையாகும். ஒற்றுமையைச் சீர்குலைப்பதில் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் பெரும் பங்கு வகித்தனர். ஆரம்பத்தில் இருந்தே புலிகள் சுந்தரம் (PLOT), ஜெகன் (TELE), ஓப்ராய் தேவன் (TELA) போன்ற மற்ற இயக்கப் போராளிகளின் தலைவர்களையும் ஈழப்போராட்டத்தில் ஈடுபட்டிருந்த தனிநபர்களையும் கொலை செய்து வந்தனர். பெரிய அளவில் போராளிகளை ஒட்டுமொத்தமாக கொலை செய்தல் என்பது ஈழப்போராட்டத்தின் ஆரம்பத்தில் இருக்கவில்லை. இதனால் பொது எதிரிக்கான போராட்டத்தில் சற்று ஒற்றுமை கடைப்பிடிக்கப்பட்டது.

வளர்ச்சிப் பாதையில் சென்று கொண்டிருந்த ஈழப்போராட்டம் 1986ம் ஆண்டு ஏப்ரல் மாதம் ரெலோ இயக்கத்தின் மீது புலிகள் நடத்திய தாக்குதலை அடுத்து வீழ்ச்சிப் பாதையை நோக்கி செல்லத் தொடங்கியது. ஈழப் போராட்டம் வீழ்ச்சிப் பாதையில் சென்ற காரணத்தால் இழக்கப்படுகின்ற ஒவ்வோர் உயிர்களும் அரசியல் இலக்கற்றவையாக இருந்தன.

ஈழப்போராட்டத்தின் ஆரம்ப காலத்தில் இருந்து போராளிகளுக்கு இடையேயான ஒற்றுமையை ஈழத்தமிழ் மக்களாக இருந்தாலும் சரி, இந்திய மக்களாக இருந்தாலும் சரி, ஈழத்தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தில் அக்கறை செலுத்திய வெளிநாட்டவர்களாக இருந்தாலும் சரி வலியுறுத்தியே வந்தனர். ஆனால் புலிகள் மக்களுடைய இக்கருத்துக்கு எதிராகவே ஆரம்பத்தில் இருந்து செயற்பட்டு வந்தனர். இடைப்பட்ட காலத்தில் (1985ம் ஆண்டு) புலிகள் ஈழத்தேசிய விடுதலை முன்னணியில் ரெலோ, ஈரோஸ், ஈபிஆர்எல்எப் ஆகிய இயக்கங்களுடன்

இலங்கைத் தமிழர் ஆதரவுக் கழகத்தைச் சேர்ந்த சி அசோகன் என்பவரால் எழுதப்பட்ட இக்கட்டுரை 'ஈழப்போராட்டம் தோல்வி அடைந்ததேன் ?' என்ற சிறுநூலில் 'ஈழப்போராட்டம் - ஒரு பார்வை' என்ற தலைப்பில் வெளிவந்திருந்தது. இக்கட்டுரை 1987ல் இந்திய இராணுவத்திற்கும் புலிகளுக்கும் மோதல் நிகழ்ந்துகொண்டிருந்த காலத்தில் பிரசுரிக்கப்பட்டது. மே 06, 1986 படுகொலை செய்யப்பட்ட தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவர் சிறிசபாரத்தினத்தின் நினைவையொட்டி இக்கட்டுரை இங்கு மீள்பிரசுரிக்கப்படுகிறது.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இணைந்த போது மக்கள் அதனை வரவேற்றனர். இந்த ஒற்றுமை இருந்த காரணத்தாலேயே 85ம் ஆண்டு நடந்த திம்புப் பேச்சுவார்த்தையின் போது ஜெயவர்த்தனேயின் கபட நாடகத்தை இராஜ தந்திரத்தால் முறியடிக்கக் கூடியதாக இருந்தது. இலங்கை இந்திய அரசுகள் தாம் நினைத்தவற்றை ஈழப்போராளிகள் மீது திணிக்க முடியாது இருந்தது.

புலிகளின் ஆயுத மோகம், பதவி ஆசை போன்றவை அவர்களை அமெரிக்க இலங்கை அரசின் சதி வலைக்குள் விழுவதற்கு காரணமாக இருந்தன. 1986ம் ஆண்டு ஏப்ரல் மாதம் புலிகள் ரெலோ இயக்கத்தின் மீது யுத்தத்தை நடத்தி நூற்றுக்கணக்கான போராளிகளைக் கொன்று அதன் தலைவர் ஸ்ரீசபாரத்தினத்தையும் கொலை செய்தார்கள். துப்பாக்கியால் சுடப்பட்டு அரை உயிருடன் இருந்த போராளிகளை தீயிட்டு கொழுத்தினார்கள். இந்தப் புலிகளுக்கும் சிங்கள இராணுவத்தினருக்கும் என்ன வித்தியாசம்? எதிரிகளுக்கு எதிராக துணைப்படை ஆயுதங்களின் ஒருபகுதி செயலிழக்க செய்யப்பட்டமையாலும் ஒரு பகுதி போராளிகளின் போராட்ட அரங்கில் இருந்து அப்புறப்படுத்தப் பட்டமையாலும் புலிகள் பொது எதிரியாகிய ஸ்ரீலங்கா இராணுவத்தைப் பலப்படுத்தினார்கள். அதனால் ஈழப் போராட்டத்தை பலவீனப்படுத்தினார்கள். எனவே தமிழ் ஈழ அரசு ஒன்று உருவாவதற்கான வாய்ப்பை தமிழீழ மக்கள் இழந்துவிட்டார்கள்.

சக போராளிகளை அழிப்பதையும் அவர்களை போராட்ட அரங்கில் இருந்து அப்புறப்படுத்துவதையும் புலிகள் ரெலோவுடன் மட்டும் நிறுத்திவிடவில்லை. தொடர்ந்து புளொட், ஈபிஆர்எல்எப் அமைப்புகளை தடை செய்தார்கள். பல போராளிகள் கொல்லப்பட்டனர். இதனால் மேலும் ஈழப்போராட்டம் பலவீனப்பட்டது. ஸ்ரீலங்கா இராணுவம் பலப்பட்டது. புலிகளின் இத்தகைய நடவடிக்கைகளினால் ஈழப்போராட்டத்தில் பங்குபற்றிய போராளிகளின் எண்ணிக்கை, ஆயுதங்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்ட காரணத்தால் சிங்கள இராணுவம் கிழக்குப் பகுதியை முதலில் தன் வசம் ஆக்கி அங்குள்ள தமிழ் மக்களை படுகொலை செய்தது. புலிகள் பின்வாங்கி யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குள் முடங்கிக் கொண்டார்கள். இறுதியில் வடமராச்சிப் பகுதியையும் சிங்கள இராணுவத்திடம் பறிகொடுத்தார்கள்.

புலிகள் பிற அமைப்புகளை அழித்தமையால் ஏற்பட்ட விளைவுகள்.

1. ஆரம்பத்தில் பல ஆயிரக்கணக்கான போராளிகளும் ஆயுதங்களும் சிங்கள இராணுவத்துக்கு எதிராக இருந்த காரணத்தால் மனோபலம் குன்றியிருந்த இராணுவத்துக்கு தற்போது சில ஆயிரம் புலிகள் மட்டும்தான் எதிராக இருக்கின்றார்கள் என்பது ஈழப் போராட்டத்தை எப்படியும் ஒடுக்கிவிடலாம் என்ற புதிய நம்பிக்கையையும் தைரியத்தையும் கொடுத்தது.

2. இலங்கையில் வாழ்கின்ற தமிழ் மக்கள் போராட்டத்தின் மீது விரக்தியுற்றார்கள். அவர்களின் தார்மீக பொருளாதார ஆதரவு குறைக்கப்பட்டது.

3. இயக்கங்களில் இருந்த தமது பிள்ளைகளை எப்படியாவது வெளிநாட்டுக்கு அனுப்பிவிட பெற்றோர் முயற்சித்தனர். பல போராளிகள் போராட்டத்தில் விரக்தியுற்று வெளிநாடு சென்றனர்.

4. இந்தியாவில் தமிழ்நாட்டில் வாழ்கின்ற தமிழ் மக்கள் தமது தார்மீக பொருளாதார ஆதரவை முழுமையாக கொடுக்க மறுத்தனர்.

5. ஒட்டுமொத்தத்தில் ஈழப்போராட்டம் பலவீனப்பட்ட காரணத்தால் சிங்கள இராணுவம் பலமடைந்தது. ஈழப்போராட்டம் வீழ்ச்சிப் பாதையில் சென்றது.

புலிகள் இத்துடன் மட்டும் நின்றுவிடவில்லை. புலிகளை விமர்சிக்கும் பொதுமக்களை அழித்தனர். தண்டனையாக 500 ரூபாய் அபராதமும் 50 கசையடியும் வழங்கினார்கள். பத்திரிகைகளை சுதந்திரமாக எழுத முடியாத நிலை ஏற்பட்டது. புலிகளுக்கு பயந்து பத்திரிகைகள் எல்லாம் புலிகள் சொல்வதற்கு தலையாட்டும் நிலமை ஏற்பட்டது. சாதாரண ஓர் குடிமகனின் அடிப்படை ஜனநாயக உரிமையான எழுத்துச் சுதந்திரம், பேச்சுச்சுதந்திரம் பறிக்கப்பட்டது.

தமிழ் மக்களின் அடிப்படை ஜனநாயக உரிமைகளை சிங்கள அரசு மறுத்த காரணத்தாலேயே அவற்றைப் பெறுவதற்காக ஆயுதம் ஏந்திப் போராட இலங்கைத் தமிழர்கள் முற்பட்டனர். ஆனால் அதே அடிப்படை ஜனநாயகத்தை சிங்கள அரசு மறுத்தது போல் புலிகளும் மறுத்தனர். இவையா புலிகள் இலங்கைத் தமிழர்களுக்குச் செய்த தியாகம் ? ☑



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

த ஜெயபாலன்

# எண்கள் பேசும் தமிழ் - முஸ்லீம் இன உறவுகள்

40% 18% 54% 22%

இக்கருத்துக் கணிப்பில் பங்கெடுத்துக் கொண்டவர்களில் பெரும்பான்மையானோர் 40 வீதம் மதநம்பிக்கை அற்றவர்கள். 38 வீதம் இந்துக்கள், 14 வீதம் இஸ்லாமியர்கள், 8 வீதம் கிறிஸ்தவர்கள்.

தமிழ் முஸ்லீம் உறவுகள் மோசமாக அல்லது மிக மோசமாக உள்ளதாக 84 வீதமானவர்கள் தெரிவித்து உள்ளமை இரு சமூகங்களினதும் உறவு மிகவும் கீழ் நிலையில் உள்ளதை மிகவும் தெளிவாகவே காட்டுகிறது. இந்நிலைக்கு இலங்கை அரசும் முஸ்லீம் கட்சிகளும் தமிழ் ஆயுதக் குழுக்களும் காரணம் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தாலும் தமிழ் ஆயுதக் குழுக்களே காரணம் என 95 வீதமான இந்துக்களும் 50 வீதமான கிறிஸ்தவர்களும், முஸ்லீம்கள் 100 வீதமும் மதநம்பிக்கை அற்றவர்கள் 85 வீதமும் தெரிவிக்கின்றனர். ஆனால் 63 வீதமான இந்துக்களும், 50 வீதமான கிறிஸ்தவர்களும் 57 வீதமான முஸ்லீம்களும், மதநம்பிக்கையற்றவர்கள் 70 வீதத்தினரும் மட்டுமே இலங்கை அரசின் மீது இக்குற்றச்சாட்டை வைக்கின்றனர். தமிழ் - முஸ்லீம் உறவுகள் மோசமடைய முஸ்லீம் கட்சிகளும் காரணம் 58 வீதமான இந்துக்களும் 50 வீதமான கிறிஸ்தவர்களும் 43 வீதமான முஸ்லீம்களும் மதநம்பிக்கை அற்றவர்களில் 35 வீதத்தினரும் தெரிவித்து உள்ளனர்.

எதிர்காலத்தில் இவ்வின உறவுகள் எப்படி அமையும் என்பது பதிலளித்தவர்கள் மத்தியில் குழப்பமானதாகவே உள்ளது. 54 வீதத்தினரே உறவுகள் விருத்தி அடையும் எனத் தெரிவித்து உள்ளனர். இந்துக்களில் 74 வீதத்தினர் உறவுகள் விருத்தி அடையும் என நம்புகின்றனர். 34 வீதமானவர்கள் உறவுகள் தொடர்ந்தும் மோசமடையும் எனவே கருதுகின்றனர். இவ்வாறு கருதுபவர்களில் 53 வீதத்தினர் மதநம்பிக்கை அற்றவர்கள். ஆனால் 43 வீதமான முஸ்லீம்களே உறவுகள் மோசமடையும் எனத் தெரிவித்து உள்ளனர்.

இவர்கள் இன ஐக்கியம் பற்றி கருத்து வெளியிடும் போது 68 வீதமானவர்கள் இன ஐக்கியத்திற்கான வாய்ப்புகள் உள்ளதென நம்பிக்கை தெரிவித்துள்ளனர். மீண்டும் 74 வீதமான இந்துக்கள் இன ஐக்கியம் ஏற்படும் என நம்பிக்கை வெளியிட்டு உள்ளனர். 22 வீதமானவர்கள் இன ஐக்கியத்திற்கான வாய்ப்புகள் இல்லை என்கின்றனர்.

இக்கருத்துக் கணிப்பில் மிக மிகக் குறைவாக 2 வீதமானவர்கள் மட்டுமே அண்மைய எதிர்காலத்தில் தமிழீழம் சாத்தியம் என நம்புகின்றனர். 90 வீதமானவர்கள் அண்மைய ஏதிர்காலத்தில் தமிழீழம் சாத்தியமில்லை எனத் தெரிவித்து உள்ளனர். 54 வீதமானவர்கள் அடுத்த 5 ஆண்டுகளுக்குள் இலங்கை இனப்பிரச்சினை தீர்க்கப்படாது என்கின்றனர். 30

தேசம் சஞ்சிகையினால் ஏற்பாடு செய்யப்பட்டு மார்ச் 10, 2007ல் நடத்தப்பட்ட தமிழ் - முஸ்லீம் இனஉறவுகள் என்ற கலந்துரையாடலில் மேற்கொள்ளப்பட்ட கருத்துக் கணிப்பு இது. இது ஒரு பூரணமான கருத்துக் கணிப்பாக அமையாவிடினும் தமிழ் - முஸ்லீம் உறவுகள் பற்றிய ஒரு பிரதிபலிப்பாக இதனைக் கருத முடியும் என்று நம்புகிறோம். இக்கருத்துக் கணிப்பில் கேட்கப்பட்ட கேள்விகளும் அதற்கு வழங்கப்பட்ட பதில்களின் வீதமும் கீழுள்ளது.

01 தமிழ் - முஸ்லீம் உறவுகள் எப்படி உள்ளது என்று நினைக்கிறீர்கள் ?

| | |
|---|---|
| மிக நன்றாகவுள்ளது | 00 % |
| நன்றாகவுள்ளது | 12 % |
| மோசமாகவுள்ளது | 56 % |
| மிகமோசமாகவுள்ளது | 28 % |
| தெரியவில்லை | 04 % |

02 தமிழ் - முஸ்லீம் உறவுகள் பாதிக்கப்பட்டு உள்ளதாக கருதினால் மட்டும் இக்கேள்விக்கு பதிலளிக்கவும். (இக்கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட காரணிகளுக்கும் நீங்கள் புள்ளியிடலாம்.) தமிழ் - முஸ்லீம் உறவுகள் பாதிக்கப்பட்டு இருப்பதற்கு யார் காரணம் என நினைக்கிறீர்கள்?

| | |
|---|---|
| இலங்கை அரசு | 28 |
| தமிழ் ஆயுதக்குழுக்கள் | 44 |
| முஸ்லீம் கட்சிகள் | 23 |
| தெரியவில்லை | 02 |

03 எதிர்காலத்தில் தமிழ் - முஸ்லீம் உறவுகள் எப்படி அமையும் என்று நினைக்கிறீர்கள் ?

| | |
|---|---|
| உறவுகள் விருத்தியடையும் | 54 % |
| உறவுகள் மோசமடையும் | 30 % |
| தெரியவில்லை | 16 % |

04 எதிர்கால சமாதானப் பேச்சுவார்த்தைகளில் முஸ்லீம்கள் தனித்தரப்பாக கலந்து கொள்வதைப் பற்றி நீங்கள் என்ன கருதுகிறீர்கள் ?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வீதமானவர்கள் மட்டுமே அடுத்த 5 ஆண்டுகளுக்குள் இனப் பிரச்சினை தீரும் என நம்புகின்றனர்.

தமிழர்கள், முஸ்லீம்கள், மலையகத் தமிழர்கள் ஆகிய மூன்று சமூகங்களும் தமிழ்பேசும் மக்கள் என்ற ஒற்றை அடையாளத்திற்குள் அடக்கப்பட்டு வந்தமையும் அந்த வகையில் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் முஸ்லீம்களின் தனித்தரப்பு ஏற்றுக் கொள்ளப்படாமையும் இலங்கை இன முரண்பாட்டின் மற்றுமொரு அம்சமாக இருக்கின்றது. இந்த வகையில் 72 வீதமானவர்கள் முஸ்லீம்களை தனித்துவமான இனமாக அடையாளம் காண்கின்றனர். கணிசமான சிறுபான்மையினர் 28 வீதமானவர்கள் முஸ்லீம் மக்களை தனித்துவமான இனமாக அடையாளம் காணவில்லை. அதேபோல் 74 வீதமானவர்கள் முஸ்லீம்கள் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் தனித்தரப்பாக கலந்துகொள்ள வேண்டும் என்று தெரிவித்து உள்ளனர். 22 வீதமானவர்கள் தனித்தரப்பிற்கு அவசியமில்லை எனத் தெரிவித்து உள்ளனர். முஸ்லீம்களை தனித்துவமான இனமாக கருதுபவர்களுடன் ஒப்பிடும் போது மலையகத் தமிழர்களை சற்று குறைவாக 60 வீதமானவர்கள் தனித்துவமான இனமாக அடையாளம் காண, சற்று அதிகமாக 38 வீதமானவர்கள் அவர்களை தனித்துவமான இனம் இல்லை எனத் தெரிவித்து உள்ளனர்.

இதனை மதஅடிப்பயையில் ஆராயும் போது முஸ்லீம்கள் தனித்துவமான இனம், அவர்கள் தனித்தரப்பாக பேச்சு வார்த்தையில் கலந்துகொள்ள வேண்டும் என முஸ்லீம்கள் நூறுவீதம் உடன்பட்டுள்ளனர். இவர்களில் 85 வீதத்தினர் மலையகத் தமிழர்களும் தனித்துவமான இனம் எனக் கருதுகின்றனர். கிறிஸ்தவர்களைப் பொறுத்தவரை 50 வீதமானவர்களே முஸ்லீம்கள் தனியான இனம் எனவும் அவர்கள் பேச்சுவார்த்தையில் தனித்தரப்பாக கலந்துகொள்ள வேண்டும் எனவும் கருதுகின்றனர். ஆனால் மலையகத் தமிழர்கள் தனித்துவமான இனம் அல்ல என கிறிஸ்தவர்கள் 100 வீதம் நிராகரிக்கின்றனர்.

இந்துக்களில் 80 வீதமானவர்கள் முஸ்லீம்களை தனித்துவமான இனமாகக் கருதுகின்றனர். ஆனால் 68 வீதமான இந்துக்களே முஸ்லீம்கள் பேச்சுவார்த்தையில் தனித்தரப்பாக கலந்துகொள்ள வேண்டும் என்று கருதுகின்றனர். 32 வீதமானவர்கள் அதற்கு அவசியமில்லை எனக் கருதுகின்றனர். ஆனால் மதநம்பிக்கை அற்றவர்களில் 60 வீதமானவர்கள் மட்டுமே முஸ்லீம்களை தனித்துவமான இனமாகக் கருதுகின்றனர். மதநம்பிக்கை அற்ற ஏனையோர் அவர்களை தனித்துவமாகக் கருதவில்லை. மதநம்பிக்கை அற்றோரில் 75 வீதமானவர்கள் பேச்சுவார்த்தைகளில் முஸ்லீம்கள் தனித்தரப்பாக கலந்து கொள்ள வேண்டும் என்று கருதுகின்றனர். 68 வீதமான இந்துக்கள் மலையகத் தமிழர்களை தனித்துவமான இனமாகக் கருதுகின்றனர். ஆனால் மதநம்பிக்கை அற்றவர்களில் 55 வீதத்தினரே மலையகத் தமிழர்களை தனித்துவமாகக் கருதுகின்றனர். ☑

(உங்கள் அபிப்பிராயங்கள் வரவேற்கப்படுகிறது.)

முஸ்லீம்கள் தனித்தரப்பு 74 %
தனித்தரப்பு அவசியமில்லை 22 %
சொல்லத் தெரியவில்லை 04 %

05 முஸ்லீம் மக்களை தனியொரு இனமாகக் கருதுகிறீர்களா ?
ஆம் 72 %
இல்லை 28 %
தெரியவில்லை 00 %

06 மலையகத் தமிழர்களை தனி ஒரு இனமாகக் கருதுகிறீர்களா ?
ஆம் 60 %
இல்லை 38 %
தெரியவில்லை 02 %

07 இலங்கையில் இன ஐக்கியத்திற்கான வாய்ப்புகள் உள்ளது என நினைக்கிறீர்களா ?
ஆம் 68 %
இல்லை 22 %
தெரியவில்லை 10 %

08 இலங்கை இனப்பிரச்சினை அடுத்த 5 ஆண்டுகளுக்குள் சுமுகமாகத் தீரும் என நினைக்கிறீர்களா ?
ஆம் 30 %
இல்லை 54 %
தெரியவில்லை 16 %

09 அண்மைய எதிர்காலத்தில் தமிழீழம் சாத்தியம் என நினைக்கிறீர்களா ?
ஆம் 02 %
இல்லை 90 %
தெரியவில்லை 08 %

10 நீங்கள் எந்த மதத்தை பின்பற்றுகிறீர்கள் ?
இந்து 38 %
இஸ்லாம் 14 %
கிறிஸ்தவம் 08 %
மதநம்பிக்கையில்லை 40 %

மதஅடிப்படையில் எவ்வாறு பதிலளிக்கப்பட்டது என்ற பட்டியல் இடமின்மைகாரணமாக முழுமையாக வழங்கப்படவில்லை. அடுத்து வெளிவர உள்ள எமது சகோதரப் பத்திரிமையான இலண்டன் குரலில் இது இடம்பெறும். முழுமையான பட்டியலை பார்க்க விரும்புபவர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

Dr பொன் சிவக்குமார்

# கிறடிட்காட் மோசடி: செய்தியும் அதன் பின்னணியும்

பிரித்தானியாவில் உள்ள 52 பொலிஸ் பிரிவுகளில் 20 பொலிஸ் பிரிவுகள் கிறடிட்காட் மோசடியின் பிரதான மையமாக பெற்றோல் நிலையங்களை குற்றம்சாட்டி உள்ளன. இக்குற்றச்சாட்டு தொடர்பாக Edinburgh, Leeds, Nottingham, Bristol, Hull, Norwich, Peterborough and Bury St Edmunds ஆகிய இடங்களில் விசாரணைகள் இடம்பெற்று வருகிறது. பிரித்தானியாவில் உள்ள 9,500 பெற்றோல் நிலையங்களில் 200 பெற்றோல் நிலையங்கள் இந்த கிறடிட்காட் மோசடியில் சிக்கி உள்ளன. கடந்த ஆண்டு கிறடிட் காட் எக்கவுண்ட்களில் இருந்து £30 மில்லியன் பவுண்கள் திருடப்பட்டு உள்ளதாக பிரித்தானியாவின் இலத்திரனியல் கொடுப்பனவு அமைப்பு APACS தெரிவிக்கிறது.



ஹம்பர்சைட் பொலிஸ் பகுதியில் ஹல் என்ற இடத்தில் உள்ள ஜெற் பெற்றோல் நிலையத்தில் 2006 நவம்பர் 8 முதல் டிசம்பர் 18 வரையான ஆறு வார காலத்திற்குள் £300,000 பவுணுக்கும் அதிகமாக கிறடிட்காட் மோசடி செய்யப்பட்டு உள்ளது. இதே மாதிரியாக 20 இடங்களில் இவ்வாறான மோசடி இடம்பெறுவதாக Det Insp Paul Welton, Humberside Police தெரிவித்தார். இம்மோசடிகளால் குறைந்தது £6 மில்லயன் பவுண்கள் பிரித்தானியாவுக்கு நட்டம் ஏற்படுவதாக மதிப்பிடப்படுகிறது. இது தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ள Det Insp Paul Welton தலைமையில் 7 பேர் கொண்ட குழு நியமிக்கப்பட்டது. இக்குழு இம்மோசடிகளுக்கும் வி.புலிகளுக்கும் தொடர்பு உள்ளதா என்பதையும் ஆராய்ந்தது. மிகவும் திட்டமிட்ட முறையில் மேற்கொள்ளப்படும் இம்மோசடிகள் சர்வதேச தொடர்புகளையும் கொண்டிருப்பதாக Det Insp Paul Welton தெரிவித்தார். ஆனால் அவர் வி.புலிகளுக்கும் இம்மோசடிகளுக்கும் தொடர்பு இருப்பதை உறுதிப்படுத்தவில்லை. அதேசமயம் அதனை முற்றாக மறுக்கவும் இல்லை.



ஒவ்வொரு பிரித்தானியருடனும் தொடர்புபடக் கூடிய இச்செய்தி தொடர்பாக பிபிசி இலங்கை உயர் ஸ்தானிகராலயத்தின் உயர் அதிகாரியான மக்ஸ்வல் ஹீகிஸ் என்பவரிடம் வினவிய போது அவர் இம்மோசடியை முற்றுமுழுதாக வி.புலிகளின் திட்டமிட்ட செயல் என்றும் இலங்கை அரசு இது தொடர்பாக பிரித்தானிய அரசுக்கு நீண்டகாலமாக தெரிவித்து வந்த போதும் பிரித்தானிய அரசு தகுந்த நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் தெரிவித்தார். மேலும் பிரித்தானியாவில் உள்ள தமிழர்களின் பெற்றோல் நிலையங்கள் வி.புலிகளாலேயே நடத்தப்படுகின்றன எனவும் அவர் குற்றம்சாட்டினார். இம்மோசடியை வி.புலிகளின் தலையில் கட்டியதன் மூலம் இலங்கை அரசு வி.புலிகளுக்கு எதிரான பிரச்சாரத்தை செழுமையாக மேற்கொண்டது. பிரித்தானிய பொலிஸ் அதிகாரிகள் வி.புலிகளுடைய தொடர்பை நிராகரிக்காத நிலையில் இலங்கை அதிகாரியின் குற்றச்சாட்டு செய்திக்கு பலமானது.



ஏற்கனவே பல நாடுகளில் தடை செய்யப்பட்டு பிரான்ஸிலும் சிக்கலுக்கு உள்ளாகிய நிலையில் இச்செய்தி வி.புலிகளுக்கு மேலும் நெருக்கடியைக் கொடுத்தது. அதனால் வி.புலிகளின் அரசியல்துறைத் தலைவர் தமிழ்ச்செல்வன் மறுப்புத் தெரிவிக்க வேண்டிய நிலைக்கு நிர்ப்பந்திக்கப்பட்டார். இலங்கை அரச படைகள் மீதுள்ள மனித உரிமைகள் தொடர்பான குற்றச்சாட்டுக்களில் இருந்து சர்வதேச கவனத்தை திசை திருப்ப இவ்வாறான பொய்க் குற்றச்சாட்டுகளை சுமத்துவதாக தமிழ்ச்செல்வன் இலங்கை அரசு மீது சாட்டினார். புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியிலுள்ள ஆர்வலர்கள் தாம் வாழும் நாடுகளின் சட்ட ஒழுங்குகளுக்கு கட்டுப்பட்டு ஒத்துழைத்து நடக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

அனைத்து சமூகங்களிலும் இவ்வாறான மோசடிகளில் ஈடுபடுபவர்கள் இருந்த போதும் இளைஞர்களின் வன்முறையும் கிறடிட்காட் மோசடியும் மீண்டும் மீண்டும் மொத்த புலம்பெயர்ந்த தமிழர்கள் மீதும் தவறான முத்திரையைக் கொடுக்கிறது. கிறடிட்காட் மோசடியில் ஈடுபட்டவர்களில் கணிசமான தொகையினர் தமிழர்களாக இருந்தாலும் மொத்த சமூகத்தில் அவர்கள் மிகச் சிறுபான்மையினரே என்பது ஏனோ வசதியாக மறைக்கப்படுகிறது. மேலும் பெற்றோல் நிலையங்களில் அடிப்படைச் சம்பளத்திற்கு கடுமையாக உழைக்கும் இவர்கள் அனைவர் மீதும் இவ்வாறான குற்றச்சாட்டை ஊடகங்கள் பொதுமைப்படுத்துவதும் கண்டனத்துக்குரியது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சேது சமுத்திரத் திட்டமும் இலங்கை மீதான இந்தியாவின் நவகாலனியமும்

ச முருகையா
முன்னாள் உதவி விரிவுரையாளர்
புவியியல் துறை, யாழ் பல்கலைக் கழகம்

சேது சமுத்திரத் திட்டம் அமுலாகும்போது, பொருளாதார வல்லுநர்கள் கூறுவதுபோல் மன்னார் மற்றும் யாழ்ப்பாணத் துறைமுகங்கள் பிரசித்தம் அடையுமென்றோ அல்லது அதிக வருமானம் பெறமுடியும் என்றோ எதிர்பார்க்க முடியாது. காரணம், சென்னை மற்றும் தூத்துக்குடித் துறைமுகம் போன்று பெரிய கப்பல்கள் தங்கும் அளவுக்கு இலங்கையின் வடக்கு, வடமேற்கு துறைமுகங்களில் வசதிகள் மிகக் குறைவு. பெரிய கப்பல்கள் இலங்கையில் வடக்கு, வடமேற்குப் பகுதி துறைமுகங்களை அணுகுவதற்கு ஆழம் குறைந்த கடற்பரப்புகள் மேலும் ஆழமாக்கப்பட வேண்டிய ஓர் புவியியல் காரணித் தடையும் காணப்படுகின்றது. இதற்கான வருடாந்த நடைமுறைச் செலவு இத்துறைமுகங்களின் வருமானத்தைவிடக் கூடுதலாக இருக்கும்.

சுற்றுலாத்துறை வடபகுதியில் விரிவடையும் என்று எதிர்பார்ப்பதில் ஓரளவுக்கு உண்மை இருந்தாலும் கூட சுற்றுலாத்துறை விரிவடையும்போது நீர்வளங்கள் மற்றும் கழிவகற்றல் விதிகளில் பாரிய பிரச்சினை எழும்போது அது இலங்கையின் தென்பகுதி வளங்களை விற்பனை செய்யும் ஓர் சந்தைமையமாகப் பயன்படுத்தப்படலாம். இலங்கை அரசியலில் ஒரு சுமுகமான நிலை உருவாகும் பட்சத்திலேயே சுற்றுலாத்துறை விரிவடைய வாய்ப்புண்டு. இந்தச் சூழ்நிலையில் ஏ9 பாதையானது செப்பனிடப்பட்டு பராமரிக்கப்படும் போது யாழ்ப்பாணத்தில் இருந்து மூன்றிலிருந்து நான்கு மணிநேர தரைப் போக்குவரத்து கொழும்பை நோக்கி விரிவடைய வாய்ப்புண்டு. அப்போது சேதுசமுத்திரத் திட்டத்தால் உள்வாங்கப்படும் சுற்றுலாப் பயணிகள் தென்னிலங்கை நோக்கி நகர்வது தவிர்க்க முடியாத ஒன்றாகும்.

தென்னிந்திய, வட இந்தியத் துறைமுகத்தைப் பயன்படுத்தி இங்குவரும் சுற்றுலாப் பயணிகளை பணத்தை வாரியிறைக்கும் வசதிகொண்டவர்களாக நாம் எதிர்பார்க்க முடியாது. பெரும்பாலானோர் வியாபார நோக்கிலேயே இந்தத் துறைமுகங்களைப் பயன்படுத்தும் நிலையே காணப்படும். அதுவும் மில்லியன்களில் வியாபாரம் செய்பவர்களாக அல்லாது சாதாரண வியாபாரிகளின் படையெடுப்பே அதிகமாக இங்கு உருவாகும்.

இன்று வடக்கு, வடமேற்கு கடல் பிராந்தியத்தில் இயற்கையாக இருக்கும் மணல்திட்டுகளின் தடையினால் பாரிய கப்பல்கள் இந்தப் பிராந்தியத்தில் பயணம் செய்ய முடியாத சூழ்நிலை இருக்கிறது. இன்றுவரை பாரிய சர்வதேச பாதாள உலக சந்தையின் முகவர்கள் இந்த இயற்கையான கடல்போக்குவரத்து தடையால் இப்பிரதேசத்தை பயன்படுத்த முடியாமல் இருப்பது வெளிப்படையாகும்.

இந்தியாவின் சமூக பொருளாதார அரசியல் ஆளுமையை இலகுவாக அதிகரிக்க வடபுலத்தில் இருக்கும் தென்னிந்திய, வடஇலங்கை மொழி கலாச்சாரத் தொடர்புகள் மிகவும் சாதகமான சூழ்நிலையை உருவாக்கும் என்பதில் ஐயமில்லை. இத்தாக்கங்களால் இன்று சர்வதேசரீதியாக பரம்பியிருக்கும் வடபுல இலங்கைத் தமிழ் மக்கள் மேன்மேலும் இலங்கையின் வடபுலத்தில் ஏற்படும் இயற்கை, செயற்கை நெருக்கடிகளினால் தமது உறவினர்களுடன் எதிர்வரும் மூன்று அல்லது நான்கு தசாப்தங்களில் சர்வதேசம் நோக்கிய புலப்பெயர்வை மேற்கொள்ள நிர்ப்பந்திக்கப்படலாம்.

இலங்கையின் வடபுல ஆளுமை இந்திய, தென்னிந்திய வியாபாரிகளால் ஆளுமைக்குட்படுத் தப்பட்டு, ஒரு எழுதாச் சட்டத்தின் அடிப்படையில் அது இந்திய ஆளுமைக்குட்பட்ட பகுதியாக மாறும் அபாயமும் உண்டு. இன்று இந்துசமுத்திரப் பிராந்தியத்தில் அகலத் தன் காலைப் பதித்திருக்கும் இந்தியாவுக்கு, இலங்கையில் கால்பதிக்கும் வாய்ப்பை, ஒரு நவகாலனித்துவப் பகுதியாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இப்பிரதேசத்தை மாற்றும் வாய்ப்பை அது உருவாக்கும்.

இச்சேதுசமுத்திரத் திட்டம் அமுலாகுவதால் ஓர் பிராந்திய வல்லரசை எதிர்த்துத் தனது ஆளுமையை எப்படி வடபுலத்தில் நிலைநிறுத்த முடியும் என்பது கேள்விக்குரிய ஒரு விடயம். இது மொத்த இலங்கையின் இறைமையையும் ஆளுமையையும் பாதிப்பதாக அமையும். இந்தியாவின் பாதுகாப்புக் கொள்கையையும், அதன் நலனையும் பாதித்து அல்லது எதிர்த்து எதனையும் நடைமுறைப்படுத்த முடியாதது மட்டுமன்றி வடபுல நிர்வாக பொருளாதார அலகுகளின் பராமரிப்பையும் இந்தியாவின் தேவை, விருப்புக்கு அமையவே செய்யவேண்டி நேரிடலாம்.

எதிர்காலத்தில் ஏற்படப்போகும் தென்னிலங்கையின் கிளர்ச்சிகளை, அதனால் ஏற்படும் பொருளாதாரப் பின்னடைவுகளை எதிர்கொள்ள முடியாது தவிக்கப் போகும் இலங்கை அரசு, தொடர்ந்தும் முழு இலங்கையையும் ஒரு யுத்தபூமியாக மாற்றி ஒரு சூனியப் பிரதேசமாக உருவாக்கும் நிலைமையே எதிர்காலத்தில் தோற்றம்பெறும் சாத்தியங்கள் தென்படுகின்றன. இதனால் ஓர் தியாகோகார்சியாவாகவோ அல்லது அந்தமான் தீவாகவோ இலங்கை உருமாறும் என்பதில் சந்தேகம் இல்லை. இதனால் முற்று முழுதாகப் பாதிப்படையப் போவது இலங்கைத் திருநாட்டின் பூர்வீக குடிகளே என்பதில் எந்தவொரு சந்தேகமும் இல்லை.

இந்தியாவின் விரைவான ஆளுமையை இலங்கையில் ஏற்படுத்தாது தவிர்த்து, எமக்கு இயற்கையாக ஏற்படுத்தப்பட்ட புவிவியல் பாதுகாப்பு இந்த சேது அணை எனப்படும் மணல்திட்டு என்பதை இலங்கை அரசு புரியாதது விந்தையே. அதுமட்டுமன்றி ஓர் வளமான கண்டமேடைப் பரப்பையும் தந்து அதில் அதி அற்புதமான கடல் இயற்கை வளங்களையும் எமக்காக இயற்கை கொட்டிக் குவித்திருக்கிறது. இப்போது உறங்கிக் கிடந்த இந்தத் திட்டம் மீண்டும் அமுலுக்கு வருகின்றது தூரநோக்கமுமின்றி இதற்கு இலங்கை அரசு தனது ஒத்துழைப்பையும் வழங்கியுள்ளது.

இதை இக்காலகட்டத்தில் உடனடியாகத் தடுக்கும் வல்லமையுள்ள இலங்கையின் முழு மக்கள் சக்தியும் சர்வதேச கடல்வள பாதுகாப்பு அமைப்புகளும் சர்வதேச கடல் சட்ட பாதுகாப்பு நிறுவனமும் கவனம் செலுத்தாவிடின் இலங்கையின் இயற்கை அழிவானது அடுத்த இரண்டு அல்லது மூன்று நூற்றாண்டுகளில் எவராலும் தடுக்க முடியாத தொன்றாகிவிடும்.

உலகின் செல்வங்களைத் தன்னகத்தே குவித்த குடியேற்றகால பிரித்தானியா 19ம் நூற்றாண்டில் வகுத்த இந்தத் திட்டத்தை அந்த நேரத்தில், தனது சர்வதேச வியாபார இராணுவப் போக்குவரத்தை இலகுவாக்க வெறுமனே ஐம்பது இலட்சம் இந்திய ரூபாய்களுடன் இலகுவாகச் செய்திருக்க முடியும். அவர்கள் அதை அமுல்படுத்தாமைக்கு சில முக்கிய காரணங்கள் இருந்தன. ஒன்று தொடர்ச்சியான சேது கடல்திட்டத்திற்கான பராமரிப்புச் செலவு அதன் வருமானத்தைவிட அதிகம் என்பது.

மேலும், இந்தத் திட்டம் அமுல்படுத்தப்படும் பட்சத்தில் குறித்த சில நூற்றாண்டுகளில் மிகவும் அழகும் அமைதியும் இயற்கைவளமும் நிறைந்த இலங்கை நாடு வளமற்ற நாடாக மாறி அழியும் வாய்ப்பு ஏற்படலாம் என்கின்ற உயிரியல், புவியியல் சூழலியல் வல்லுநர்களின் ஆலோசனைக்கேற்பவும் இத்திட்டத்தை இலங்கையில் இயற்கைவளத்தில் அக்கறை கொண்டு பிரித்தானியா நிறுத்தியது.

இலங்கை ஜனாதிபதியாகவிருந்த திரு ரணசிங்க பிரேமதாசா தனது முதல் ஜனாதிபதிப் பிரச்சார காலத்தின்போது "வடபகுதி பயங்கரவாதத்தை அழித்து இலங்கை முழுவதையும் இன்னும் நான்கு தசாப்தங்களில் முழு பௌத்த நாடாக மாற்றுவதற்கு தேவையேற்பட்டால் நான் பேயுடனும் கூட்டுச் சேருவேன்" என்று தெரிவித்தார். ஆனால் பேயுடன் கூட்டுச்சேருவதைவிட இந்த சேதுசமுத்திரத் திட்டம் ஆபத்தானது, இறைமைக்கும் ஆபத்தானது என்பதை கருத்தில் கொண்டு அதை ஏற்கமறுத்துவிட்டார்.

இந்திய அரசுக்குத் துணைபோன சந்திரிக்கா குமாரதுங்கவும் இதன் திட்ட அங்குரார்ப்பன மகாநாட்டில் பேச்சுவார்த்தை செய்துகொண்ட ரணில் விக்கிரமசிங்கவும் இத்திட்டத்திற்கு ஒத்துப்போனதின் மூலம் வடபகுதி மக்களின் வாழ்வு மட்டுமன்றி முழு இலங்கையின் இறைமையையும் இத்திட்ட செயல்பாட்டின்மூலம் இந்திய நாட்டின் பொருளாதார மேம்பாட்டுக்காகவும் தமது சுயநலத் தேவைக்காகவும் நாட்டின் நன்மையில் ஓர் தொலைநோக்குப் பார்வையின்றி பிராந்தியக் காலனித்துவத்திற்கு அடைவுவைத்து தாரைவார்த்த தலைவர்களாவர்.

எனவே இச்சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டமானது இலங்கையின் புவியியல் சூழல், மனித சூழல் கடல் - தரை உயிரினச் சூழல் வாழ்வு மற்றும் பொருளாதார, அரசியல் சமூக காரணிகளில் பாதகமான பாதிப்பையும் எற்படுத்தக்கூடிய ஓர் ஆபத்தான செயல்திட்டம் என்றே கூறவேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

IMMIGRATION / EMPLOYMENT / HOUSING / WELFARE

# Rengan N Devarajan

## SOLICITORS



**Immigration & Nationality**

**Employment**

**Landlord & Tenant**

**Housing**

**Welfare Benefits**

**Matrimonial**

**1st Floor**
**128 Ilford Lane, Ilford**
**Essex, IG1 2LE**

**Tel : 020 8478 5797**
**Fax : 020 8478 4486**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்



# நீங்கள் உங்கள் நாட்டுக்கு திரும்பிச் செல்வதைப் பற்றி எண்ணுகிறீர்களா ? எங்களுடன் பேசுங்கள். எங்களால் உங்களுக்கு உதவ முடியும்.

நாங்கள் உங்கள் விமானச் சீட்டைப் பெற்றுத் தருவோம்
நாங்கள் உங்களுக்கு இங்கும் அங்கும் ஏற்படும் உள்நாட்டு பயணச் செலவை வழங்குவோம்
நாங்கள் உங்களுக்கு வேண்டிய பயண ஆவணங்களைப் பெற்றுத்தர உதவுவோம்
நாங்கள் உங்களை வழியனுப்பி வைப்பதிலும் வரவேற்பதிலும் உதவுவோம்

## தஞ்சம்கோரியோர்

யு.கே இல் இருந்து உங்கள் நாட்டிற்கு சுயவிருப்பில் திரும்பிச் செல்வதற்கு

**31 மே 2007**

திகதிக்கு முன் விண்ணப்பித்தால்

**£3500**

பெறுமதியான மீள்இணைவு உதவியை திரும்பும் ஒவ்வொருவரும் பெறமுடியும்.

முக்கிய குறிப்பு : யூன் 2007ல் விண்ணப்பித்தால் இந்த உதவித் தொகை £2500 ஆக குறைக்கப்படும். யூன் 2007க்கு பின் வரை காத்திருந்து விண்ணப்பித்தால் உங்களுக்கு வழமையான ஒருவருக்கு £1000 பெறுமாதியான மீள்இணைவு உதவி மட்டுமே கிடைக்கும்.

மேலதிக விபரங்களுக்கு ஐ ஓ எம் இன் இலவச தொலைபேசி இலக்கத்திற்கு அழையுங்கள்

**0800 783 2332**

ஐ ஓ எம் ஒரு சுயாதீன சர்வதேச அமைப்பு. இது பிரித்தானிய அரசின் ஒரு பிரிவல்ல.
நீங்கள் விரும்பினால் மட்டுமே. நீங்கள் உங்கள் நாட்டுக்குத் திரும்பிச் செல்ல நாங்கள் உதவுவோம்.



This Programme is Co-funded by the European Union

IOM International Organization for Migration

21 Westminster Palace Gardens
Artillery Row, London SW1P 1RR
tel: 0800 783 2332
Fax: 020 7233 3001
www.iomlondon.org

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்